மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

லர் 5 | 15–4–57 | இதழ் 24

காசு என்றே அழைப்போம்!

ஒரு நாட்டிலே அதிக செலாவணியில் இருக்கும் பொருள்களின் பெயர்கள் அவர்களின் சொந்த மொழியிலேயே இருக்கவேண்டும். 'நயா பைசா' என்ற பெயர் தமிழல்ல. அதில் தமிழிலும் ஒன்றும் குறிக்கப்படவில்லை.

ஆங்கிலேயர் ஆண்டபோது கூட நமது காசுகள் சிலவற்றில் தமிழ் இருந்ததே! அடிமை நீங்கி சுதந்திரம் அடைந்த பின் அந்தச் சலுகைகூட இல்லையே என்று வருந்துவது இயற்கை.

அரியணையில் தமிழ்த் தாய் அமர்ந்த இவ்வருஷம் நமது நாணயத்திலும் தமிழ் மொழி இடம் பெறத்தான் வேண்டும். ஹிந்திப் பித்து இந்த அளவுக்கு வேண்டுவதில்லை. கார்டிலே ஹிந்தி; கவரிலே ஹிந்தி; மணியார்டர்பாரத்தில் முழுக்க முழுக்க ஹிந்தி. இவைகளைத் தமிழ் நாட்டு மக்கள் பார்க்கும்பொழுது அவர்களுடைய மனத்தில் கொஞ்சம் சிரமம் உண்டாவது இயற்கை.

ஹிந்தியை நன்றாகப் பரப்பட்டும். வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. அதற்காக எல்லாவற்றிலும் அதையே போட்டுத் தொலைப்பது கண்டிக்க வேண்டிய விஷயம்தான்.

தமிழர்களைப் பொறுத்த வரையில் இந்த நாட்டில் பணத்தில் குறைவான மதிப்புடைய நாணயத்தை 'காசு' என்றுதான் அழைத்திருக்கிறார்கள். இந்த நயா பைசாவையும் 'காசு' என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று நாம் எண்ணுகிறோம். ரூபாய்க்கு நூறு காசு என்றால் எல்லோருக்கும் தெரியும்.

ஆகவே, இன்று முதல் புது மணம் வீசட்டும். நாடு நம்முடையது, அரசு நம்முடையது. நம் நாட்டைத் 'தமிழ்நாடு' என்றே அழைப்போம். புதுப் பைசாவையும் காசு என்றே அழைப்போம்.

(*'ஆனந்த விகடன்'* 14-4-'57)

நாடு 25 காசுகள் ★ *மாதமிருமுறை* ★ வெளிநாடு 32 காசுகள்

விற்பனையாளர்களுக்கு

★

மன்றம் ஆறும் ஆண்டுத் துவக்க முதல் வார இதழாக வெளிவர இருப்பதால் அதற்குமுன் இது வரை பாக்கி வைத்துள்ள விற்பனையாளர்கள் அதை அனுப்பிவைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். ஒவ்வொரு விற்பனையாளருக்கும் தனித்தனியே அவரவர் கணக்குகள் பற்றிய விபரங்களை விரைவில் குறித்து அனுப்பப்படும். அதன்படி நடந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம். பாக்கி வைத்திருக்கும் விற்பனையாளர்களுக்கு கண்டிப்பாக இதழ்கள் நிறுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்—மன்றம்.

சந்தாதாரர்களுக்கு

★

இப்பொழுது இருக்கும் சந்தாதாரர்களுக்கு அவரவருக்கிருக்கும் தொகைப் பொருத்து புதிய கட்டணப்படி இதழ்கள் அனுப்பிவைக்கப்பெறும். அது முடிந்த வுடன் அவர்கள் புதிய சந்தா விபரப்படி பணம் அனுப்புதல் வேண்டும். இதுபற்றி ஒவ்வொரு சந்தாதாரர்களுக்கும் ஒரு அறிவிப்பு அனுப்பப்படும்.

மன்றம் வார இதழின்

சந்தா விபரம்

★

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	....	ரூ.	15·00
ஓராண்டு	....	ரூ.	8·00
ஆறுமாதம்	....	ரூ.	4·00
தனி இதழ்	....		16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் அனுப்ப தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	....	ரூ.	18·75
ஓராண்டு	....	ரூ.	10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	....	20 காசு.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 5 ★ (15—4—57) ★ இதழ் 24

கேரள மந்திரிசபை!

கேரள மாநிலத்தில் கம்யூனிசுட்களின் தலைமையில் புதிய மந்திரிசபை அமைந்துள்ளதை வரவேற்கிறோம்!

இதற்கு முன் நடந்த இரு தேர்தல்களின் பின்னும், அந்த மாநிலத்தில் நிலையான மந்திரி சபை அமையவில்லை. சட்டசபையில் மாறு பட்ட கட்சிகளின் பலம் ஒன்றை யொன்று மோதுவதாக, தனிப்பட்டு ஆட்சியை நடத்த முடியாததாக இருந்தது. அண்மையில் நடந்த பொதுத் தேர்தலின் பின்னும் குழப்பமான நிலை வந்துகொண்டிருந்தது; எந்த அரசியல் கட்சியும் தனிப்பட்ட முறையில் பெரும்பான்மை நிலை அடையவில்லை. கடைசியாகத் தேர்தல் முடிவுகள் முற்றுப் பெறும் நிலையில், மொத்தம் 126 இடங்களில், கம்யூனிசுட்கள் 60, காங்கிரசு 43 பிரசா-சோசியலிசுட் 9, முசுலீம்-லீக் 8, சுயேட்சையினர் 6 என்று பிரிந்திருந்தன. தனிப்பட்டு பெரும்பான்மையாக யாருக்கும் வரவில்லையென்றாலும், அதிகப்படியான இடங்களைப் பிடித்த கம்யூனிசுட் கட்சி, சுயேட்சையான ஐந்து பேர்கள் ஆதரவுடன் மந்திரி சபை அமைக்கும் வாய்ப்பைப் பெற்றது. அவ்வாறு அமைத்தும் உள்ளது.

மீண்டும் குடியரசுத்தலைவர் ஆட்சிக்குக் கீழ் கேரள மாநிலம் வரவில்லை. அந்த வகையில் குடியாட்சி முறையில் பற்றுக் கொண்டோர்கள், தேர்தலுக்குப் பின் மந்திரி சபை அமைவதை வரவேற்பார்கள். அதிலும், இந்தியாவில் சர்வாதிகாரப் போக்கில் காங்கிரசும் அதன் தலைமை பீடமும் போய்க் கொண்டிருக்கிற நிலையில், அதன் பிடி ஒரு மாநிலத்தில் தளர்ந்து மாற்றுக்கட்சி யொன்று மந்திரிசபை அமைக்கிறதென்றால், அது காங்கிரசின் சர்வாதிகாரத்துக்கு பலமான அடியாகும். "தாம் தான் இந்தியா, இந்தியாதான் தாங்கள்" என்று இறுமாப்புடன் இருந்து வந்த காங்கிரசுக்காரர்கள் கேரளத்தில் மாற்றுக் கட்சியினர் மந்திரிசபை அமைப்பது கண்டு, சற்று அடங்கித்தான் செல்லவேண்டும்.

இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள், மாநிலங்களையும், மத்திய அரசாங்கத்தையும் ஒரே கட்சியினர் மட்டும் ஆளுவார்கள் என்ற குருட்டு நம்பிக்கையிலே-இன்னும் சொல்லப் போனால் அப்படித்தான் ஒரே கட்சி ஆளவேண்டும் என்ற ஆசையிலே, பலமான அரசியலமைப்பை உண்டாக்கினார்கள். மாநிலங்களின் உரிமைகளெல்லாம் பிடுங்கப்பட்டு, மத்திய அரசாங்கத்திடம் குவிக்கப்பட்டன. எதேச்சாதிகார முறையில் மத்திய அரசு திரும்புமேயானால் அதைத் தடுத்து நிறுத்துவதற்கான வலிவு மாநிலங்களுக்குத் தரப்படவில்லை. டில்லி ஆதிபத்தியம் ஆட்டுகிற சுட்டு விரலுக்குப் பணிந்துதான் மாநில அரசுகள் ஆடவேண்டும். இந்த வகையில் டில்லி ஏகாதிபத்தியத்தின் பிடி தென்னாட்டின் மீது இந்திய அரசியல்சட்டத்தின் துணையால் வலுப்பெறலாயிற்று. இவ்வாறு மத்திய அரசு—மாநில அரசு எனப் பேசுவது தவறு, இந்தியாவின் ஒற்றுமையைக் குலைப்பதாகும் எனச் சிலர் கருதலாம். ஆனால் மாநில அரசியலில் முக்கிய பங்கேற்றுக் கொள்ளும் எவரும் அத்தகைய முடிவுக்கு வந்துதானாக வேண்டும். டில்லி ஆதிபத்தியத்தை எதிர்க்கும் துணிவு பிறந்தாலன்றி, எதிர்கால வாழ்வு மாநிலங்களுக்கு-குறிப்பாகத் தென்னாட்டு மாநிலங்களுக்கு கிடையாது. கேரள மாநிலத்துக்கு முதன் மந்திரியாக வந்துள்ள கம்யூனிசுட் தலைவர் இ.எம் சங்கரன் நம்பூதிரிபாத் அவர்கள் மந்திரி யேற்பு நாளன்று, இன்னும் அரசாங்க நிலையில் புகுந்தும் புகாத வேளையில், விடுத்த முதல் அறிக்கையில், மத்திய-மாநில முறை பற்றி, டில்லி சர்க்கார்-கேரளசர்க்கார் நிலை பற்றி பேசியுள்ளனர்.

"வருவாய்களை மத்திய அரசாங்கத்துக்கும் மாநில அரசாங்கத்துக்குமாகப் பிரிக்கும் தற்பொழுதுள்ள முறை, கேரள மாநிலத்துக்கு உதவிபுரிவதாக இல்லை"

வந்தும் வராததுமாகக் கேரள மாநில முதலமைச்சர் கூறவேண்டியிருக்கிறது. அவர் கம்யூனிசுட்டாக, இந்தியா ஒன்று என்ற எண்ணமுடையவராக இருந்தபோதிலும், கேரளத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் பொழுது தனது பகுதிக்குரிய பங்கு மத்திய சர்க்காரால் அளிக்கப்படவில்லை எனக் கூற வேண்டியிருக்கிறது.

இவ்வாறு மத்திய அரசு-மாநில அரசு, இவைகளிடை இருக்க வேண்டிய வரிவிதிப்பு பங்குப் பிரிவினை போன்ற குற்றச்சாட்டுகளெல்லாம் தென்னாட்டில்தான் எழுகின்றன. நாம் மட்டும் கூறிவந்தபொழுது, பிரிவுஎண்ணத்தினர் எனப் பேசப்பட்டோம், ஏசப்பட்டோம். ஆனால் பின்பு நேரடியான அரசியல்-அரசாங்க-மாநில விவகாரங்களைப் பார்க்கும் பொழுது அவர்களே ஒத்துக்கொண்டு கூற வேண்டியதாயிற்று. தமிழகத்தில் மட்டுமல்ல, தென்னாட்டில் மற்ற பகுதிகளிலும் மத்திய, மாநில அரசுபற்றிப் பேசப்படுகிறது. ஆந்திர முதலமைச்சர் கோபாலரெட்டி முன்பு பேசினார். மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா சற்று உரத்த குரலிலேயே கேட்டுப்பார்த்தார். இப்பொழுது கேரளத்தின் முதன்மந்திரி இ. எம். சங்கரன் நம்பூதிரிபாத் அவர்களும் கேட்கிறார். இவையெல்லாம், தெற்கிலுள்ள மாநிலங்களிலிருந்து கேட்கப் படுகின்றனவேயன்றி; பம்பாய் முதன்மந்திரியோ உத்திரப் பிரதேச நிதிமந்திரியோ வங்காளத்து முக்கிய மந்திரியோ, தங்கள் மாநிலம் புறக்கணிக்கப் பட்டு விட்டதாக முறையிட்டார், மத்திய அரசு-மாநில அரசு வரைமுறைபற்றிப் பேசினாரென்று காணமுடியாது. அங்கு டில்லி அரசாங்கம் அவர்களுடைய அரசாங்கம். இங்கு மத்திய அரசாங்கம் மாநிலங்களை அடக்கியாளும் ஒரு அரசியல் அமைப்பாக இருக்கிறது. தென்னாட்டு அரசியலில் முக்கிய பங்கேற்றுக் கொள்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர் காங்கிரசாயினும்சரி, கம்யூனிசுட்டாயினுமசரி, மத்திய அரசாங்கம் நடத்தும் ஒருதலை ஆதிக்கத்தைப்பற்றி நினைக்காமலிருக்கமுடியாது, பேசாமலிருக்கமுடியாது. தென்னாட்டிலுள்ள எந்த மாநிலஅரசும் தனது மாநிலத்தை நன்கு வளப்படுத்த விரும்பினால் வடநாட்டு எதிர்ப்பும், டில்லி ஆட்சியின் ஒத்துழையாமையும்தான் ஏற்படும். காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த மாநில முதலமைச்சர்களில் சிலர் தென்னாட்டுக்காகப் போராடி, அடக்கப்பட்டு, அழுத்தப்பட்டிருக்கின்றனர். அதிலும் மாற்றுக்கட்சியினரென்றால், டில்லி ஏகாதிபத்தியத்தின் கடுமையான பிடிவாதத்தை ஒருவாறு ஊகித்துணர முடியும்.

தங்களது வளர்ச்சிக்காக அந்தப் பகுதியிலிருந்து கிடைக்கும் பகுதியை நியாயமான முறையில் கேட்கும்பொழுது தென்னாட்டு மாநிலங்களுக்குத்தான் மறுப்பு வருகிறதேயன்றி, வடநாட்டு மாநிலங்களுக்கு அந்த மறுப்பு இல்லை. மாறாக அவர்கள் கேட்காமலே உரிய பங்கு தரப்பட்டுவிடுகிறது. கேரள மாநிலத்துக்கு அதிகப் பங்கு வருமானம் வேண்டும் என்று கேட்கவந்த கேரள முதலமைச்சர் இ. எம். சங்கரன் நம்பூதிரிபாத் அவர்கள் "வங்காளத்திலிருந்து வாங்கப் படுகிற சணல் வரியில் ஒரு பகுதி வங்காள மாநிலத்துக்குத் தரப்படுகிறது; ஆனால் கேரளத்திலிருந்து தேங்காய், மிளகு, இரப்பர் இவைகளின் மூலம் கிடைக்கிற வரியில் கேரளத்திற்கு ஒரு பங்கும் கிடையாது" என்று குறிப்பிட்டுள்ளார். ஆட்சிப் பொறுப்பேற்கும்பொழுது, செய்யவேண்டிய வேலைகளையும் மாநிலத்தின் நிலைமையையும் பார்க்கும் பொழுது, மத்திய அரசாங்கத்தின் வரிவசூல் தன்மையின்மீது அவரது கண்ணோட்டம் செல்கிறது. டில்லி ஆதிபத்தியம் ஒரு மாநிலத்திற்குத் தாராள மனப்பான்மையுடன் நடப்பதும், மற்றொரு மாநிலத்தைப் புறக்கணிப்பதும் தெரிகிறது. ஒரே இந்தியா, ஒரே அமைப்பு,ஒற்றுமை, ஒற்றுமை என்று சொன்னால் கூட ஆட்சிக்கு வரும்பொழுது கேரளம், வங்காளம், மத்தியஅரசு என்று வேறுபடுத்தி ஒன்றையொன்று பிரித்துக் காட்டித்தான் பேசவேண்டியிருக்கிறது.

தென்னாட்டில், காங்கிரசுக்கும் மீறி மாற்றுக் கட்சியொன்று மந்திரிசபை அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது, வரவேற்கத்தக்கது. அந்தவகையில் கேரளத்தில் அமைந்துள்ள புதிய மந்திரிசபையை வரவேற்கிறோம். குடியாட்சி முறையில், ஏகபோக மிராசுமுறையாக ஒரு கட்சிமட்டும் அதிகாரத்தில் இல்லாமல், மற்றக்கட்சிகளுக்கும் ஆளும் வாய்ப்பு இருந்தால், அரசாங்கம செம்மையுறும், குடியாட்சி முறையின் பண்பு வளரும்.

கேரளம் இயற்கை வளங்கள் பலவற்றைப் பெற்று, தனது விளைபொருள்களான மிளகு தேங்காய், இரப்பர் இவைகளின் மூலம் இந்தியாவுக்கு வெளிநாட்டு நாணய வசதிகளை உண்டாக்கித் தரும் பகுதியாகும். வளமிருந்த போதிலும், அதிலிருந்து வருவாய் அதிகம் கிடைத்தபோதிலும், அதன் பெரும்பங்கு டில்லி அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப் பட்டு கேரளத்துக்கு உரிய பங்கு கிடைக்கவில்லை. அங்கு வந்துள்ள புதிய மந்திரிசபை மத்திய அரசாங்கத்துடன் போராடி உரிய பங்கைப் பெறுவதற்கு முயற்சிக்கிறது. அந்த முயற்சி வெற்றி பெறுவதாக !

வாழ்க கேரளம் !

"திறப்பு விழா" மந்திரிகள்!

மந்திரிகள் தங்களுக்குரிய முக்கிய அரசாங்கப் பொறுப்புகளைவிட்டு, ஒரு மாதத்தில் பெரும்பாலான நாட்கள் வெளியூர்களில் சுற்றிக்கொண்டிருப்பதைப் பலர் இதற்கு முன் சுட்டிக்காட்டியுள்ளனர். மந்திரிகளின் சுற்றுப் பயண விவரத்தைப் பார்த்தால், அவற்றில் அவர்கள் சென்றேயாகவேண்டுமென்ற அவசியம் பெரும்பாலும் இருப்பதில்லை. அரசாங்க அலுவல்களின் காரணமாக அங்கு செல்கிறார்கள் என்று கூறமுடியாது. விருந்து, வேடிக்கை திறப்புவிழா, இப்படிப் போன்ற நிகழ்ச்சிகள் தாம் மந்திரிகளின் சுற்றுப்பயணத் திட்டங்களில் இடம் பெறுகின்றன. பெரும்பாலான நாட்கள் அவர்கள் சுற்றிக்கொண்டிருக்கின்றார்கள் என்ற காரணத்தினால், சென்னைக்கு வந்ததும் அவர்கள் பார்த்து உத்தரவு தரவேண்டிய குறிப்புகள் குவிந்து விடுகின்றன. திறப்புவிழாக்களில் நேரமெல்லாம் செலவிடுகின்ற மந்திரிக்கு, கோட்டைக்கு வந்து காகித அட்டையைத் திறந்து அரசாங்கக் காரியத்தைப் பார்க்க நேரமிருப்பதில்லை. செய்யப்பட்ட முடிவுகளை ஒட்டிக் கையெழுத்திட்டுப் போகவேண்டிய நிலை பிறந்துவிடுகிறது. அவசர அவசரமாகக் கையெழுத்துக்களைப் போட்டு-பக்கத்திலிருப்பவர் காட்டுகிற இடங்களில் "சின்னக்கையெழுத்தா பெரிய கையெழுத்தா?" என்று கேட்டுப் போட்டு, மந்திரி மீண்டும் கிளம்பிவிடுகிறார், அடுத்த சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பிக்க!

மந்திரிகளின் சுற்றுப்பிரயாணங்கள் கேலிக்குரிய பொருள்களாகிவிட்டன. மாநில அரசாங்கத்தை நடத்திச் செல்லும் பெரிய பொறுப்பை ஏற்றவர்கள், காப்பிக் கடைத்திறப்புவிழாவிலிருந்து கக்கூசு திறப்புவிழா வரை, அந்த ஊர் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் சென்றுவிடுகின்றனர். அங்கு சென்று மாலை மரியாதைகளை ஏற்றுக்கொண்டு, முன்னதாகத் தயாரித்துத் தரப்பட்டிருந்த பேச்சைப் படித்துச் சொல்ல விருந்து வேடிக்கைகளில் கலந்துகொண்டு அங்கிருந்து கிளம்பிவிடுகிறார்கள். அந்த ஊரில் அவர் தங்கிய நேரத்தில் ஆற்றிய அரசாங்க வேலை என்னவென்று பார்த்தால், ஒன்றுமிருக்காது.

மந்திரிகள் வீணாகச் சுற்றுகிறார்களென்றால், அதனால் அரசாங்கக் காரியங்கள் தடைப்படுவதுமட்டுமல்லாமல், அரசாங்கத்தைக் கவனிப்பதற்கான நேரத்தை வீணாக்குகிறார்கள் என்பது மட்டுமல்லாமல், மக்கள் தரும் வரிப் பணத்தையும் வீணாக்கிவிடுகிறார்கள். மந்திரி ஒரு ஊருக்குப்போய் ஒரு கிணற்றையோ, தொட்டியையோ திறந்துவைக்கிறாரென்றால் மந்திரிக்கு அந்த ஊர் போவதற்கு மக்கள் தரும் வரிப்பணத்திலிருந்து "அலவன்சுகள்" கொட்டியளக்கப்படுகின்றன. மந்திரி செல்கின்றாரென்றால், அவருக்குப்பின்னால், மாவட்ட கலெக்டர், மாவட்ட போலிசு அதிகாரி, உதவி மாவட்ட போலிசு அதிகாரி, சர்க்கிள் இன்சுபெக்டர், சப்-இன்சுபெக்டர், தாசில்தார், போலிசுக்காரர்கள்-இப்படி ஒரு பெரியபடை, அவரவர்களுடைய வேலையைவிட்டு, மந்திரி பின்னால் நகர்கிறது. அவர்களுக்கெல்லாம் மக்கள் தரும் வரிப்பணத்திலிருந்து அலவன்சுகள் தரப்படவேண்டியிருக்கிறது. நேரம் பாழாவதுடன், வேலைகள் கெடுவதுடன், மக்களின் வரிப்பணமும் வீணாக்கப்படுகிறது. இவ்வளவுக்கும் பின் மந்திரி என்ன செய்தாரென்று பார்த்தால் "பள்ளிக்கூடத்தைத் திறந்தார்" "பாதையைப் பார்வையிட்டார்" என்று இருக்கும். அவர் வந்துதான் ஆகவேண்டிய காரியமாக இருக்காது.

மந்திரிகள் வீணாக ஊர் சுற்றுகிறார்கள் என்ற கருத்து, மாற்றுக் கட்சியினரான நாம் மட்டும் சொல்லவில்லை அந்தக் கருத்தை அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒருவர், நீதிபதி ஒருவர், நீதிபதி என்றால் சாதாரண நீதிபதியல்ல சென்னை மாநிலத்தில் தலைமை பூண்டு விளங்கும் உயர் நீதிமன்றத்தில் வீற்றிருக்கும் ஒருவர் தமது தீர்ப்பில் ஓரிடத்தில் தெள்ளத் தெளியக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வழக்கு அதில் எதிர்மனுதாரராக ஒரு மந்திரி இருந்தார். அந்த மந்திரி சென்னை மாநில மந்திரிதான்-நீண்ட காலமாக மந்திரியாக இருப்பவர். கடந்த பதின்மூன்று ஆண்டுகளில் அவர் தொடர்ந்து மந்திரியாக இருப்பவர், ஒரு மந்திரிசபை கவிழ்ந்து மற்றொரு மந்திரிசபை அமைந்தாலும், எந்த மந்திரி போய் எந்த மந்திரி வந்தாலும் சரி, இவர் மட்டும் எப்பொழுதும் மந்திரிதான். அதுமட்டுமல்ல, சட்டசபைத் தேர்தலில் அவர் தோற்றாலும் சரி வெற்றி பெற்றாலும் சரி அவர் மந்திரிதான். அவர் யாரென்பதைப் படிப்பவர்கள் இதற்குள் தெரிந்து கொண்டிருப்பார்கள்-

அந்த மந்திரி ஒரு வழக்கில் எதிர் மனுதாரராக இருந்த காரணத்தால், கோர்ட்டுக்கு வந்து சாட்சியளிக்க வேண்டியிருந்தது. கோர்ட்டுக்கு வந்து சாதாரண மக்களைப்போல, சாட்சி சொல்வது தனது கௌரவத்திற்குக் குறைவு என்று நினைத்தாரோ என்னவோ, கோர்ட்டு வருவதிலிருந்து தமக்கு விதிவிலக்கு அளிக்கும்படி மந்திரி கேட்டுக்கொண்டார்.

மந்திரிஎன்றால் 'கனம்', பெரிய மனிதர், அதிலும் இந்த மனுதாரர் சிரஞ்சிவி வரம் பெற்ற 'மந்திரி' சிரஞ்சிவி வரம்பெற்ற 'கனம்' வர அவர் ஒருப்படவில்லை. மேலும் மந்திரி என்றால் சுற்றுப்பயணம், திறப்புவிழா இவைகளில் நேரம் போய்விடுவதால், கோர்ட்டுக்கு வந்து சாட்சியம்தர அவகாசமில்லை. விதிவிலக்கு கேட்டு மந்திரியின் சார்பாக ஒரு மனு உயர்நீதிமன்ற நீதிபதி முன் வைக்கப்பட்டது. நீதிபதி அந்த மனுவைத் தள்ளி, தாம் அவ்வாறு தள்ளுவதற்கான காரணங்களைத் தரும்பொழுது கிழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"மந்திரிபதவி வகிப்பவர் நீதிமன்றத்துக்கு வந்து, குடியரசில் ஒவ்வொரு அங்கத்தினரும் செய்ய வேண்டியக் கடமையைச் செய்வதில் முரண்பாடு ஏதுமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மன்றத்துக்கு வர நேரமில்லாதவாறு அவ்வளவு கடுமையான வேலை அவர்களுக்கு இருக்கிறதா? அப்படியாயின் விதி விலக்கு அளிக்க சட்டபிரிவு இருக்கிறது. அதிகவேலை உள்ளவர் எல்லா வேலைகளையும் கவனிக்கிறார்கள். வேலை குறைவாயுள்ளவர்களுக்கு எந்த வேலையையும் கவனிக்க நேரமிருப்பதில்லை.

பாலங்கள், மதகுகள், சிற்றுப் பந்தல்கள் திறக்கமட்டும் மந்திரிகளுக்கு அவகாசமிருக்கிறது. ஆகவே அவர்கள் கோர்ட்டுக்கு வந்து தங்களுக்குத் தெரிந்தவற்றைச் சொல்ல அவர்களுக்கு அவகாசமிருக்கவேண்டும்."

இது ஏப்ரல்-2ந் தேதி, சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி ஒருவர் அளித்த தீர்ப்பில் இருக்கிறது.

கோர்ட்டுக்கு வந்து சாட்சி சொல்வது கௌரவக் குறைவு என்று நினைத்தால் அதை நீதிபதி கண்டிக்கிறார். குடியாட்சி முறையில் நீதிமன்றத்தில் நீதி துலங்க சாட்சியளிக்க வருவது ஒவ்வொருவருடைய கடமையாகும். கனம் என்றோ, மந்திரி என்றோ, யாரையும் ஒதுக்கிவிட முடியாது.

கோர்ட்டுக்கு வந்து சாட்சிதர மந்திரிகளுக்கு நேரமில்லை என்ற வாதத்தையும் நீதிபதி அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. அரசாங்கக் காரியத்தினால் அவசரமில்லையென்றால், சட்டத்தின்படி மந்திரிகளுக்கு கோர்ட்டுக்கு வருவதினின்றும் விதிவிலக்கு அளிக்கலாம் என்பதை நீதிபதி ஒப்புக்கொள்கிறார். ஆனால் இந்த மந்திரிகளுக்கு அப்படி ஒன்றும் அவகாசமில்லாமற் போகவில்லையென்கிறார்.

வீணாக மந்திரிகள் ஊர்கள் சுற்றுவதில் நேரத்தையும் அரசாங்கப் பணத்தையும் செலவிடுகிறார்கள் என்று நாம் குற்றஞ்சாட்டுகிறோமல்லவா? அத்தகைய குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தித் தீர்ப்பு தருவதுபோலிருக்கிறது. உயர்நீதி மன்ற நீதிபதி தந்த தீர்ப்பு அவர் தீர்ப்பில் குறிப்பிடுகிறார்.

"பாலங்கள், மதகுகள் சிற்றுப் பந்தல்கள் ஆகியவற்றைத் திறக்கமட்டும் மந்திரிகளுக்கு அவகாசமிருக்கிறது. ஆகவே கோர்ட்டுக்கு வந்து தங்களுக்குத் தெரிந்தவற்றைச் சொல்ல அவகாசமிருக்கவேண்டும்"

உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பில் அவ்விதம் கூறப்படுகிறது. ஊருக்குஊர் போய், "திறப்பு விழா" என்ற பேரில் மந்திரிகள் வீண் பொழுது போக்குகிறார்கள் என்பதற்கு நீதிபதி அவர்களே, திட்டவட்டமாகக் கூறுகிறார். நாமாவது "பள்ளிக்கூடம் திறக்க, பாதையைப் பார்வையிட" மந்திரிகள் ஏன் வீணாக அரசாங்க நேரத்தையும் பாழாக்குகிறார்கள் என்று கூறினோம். பள்ளிக்கூடம், பாதையைக் கொஞ்சம் கௌரவமான, பெரிய இடங்களையாவது குறிப்பிட்டோம். நீதிபதி அவர்கள், "பாலம், மதகு, சிறு குடிசை எனக் கூறுகிறார். அதாவது, தரங்குறைந்து, அவசியமற்ற முறையில், சிறு காரியங்களுக்குக்கூட மந்திரிகள் போய்விடுகிறார்கள் என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.

நமது மந்திரிகள் ஊர்சுற்றுகிற இலட்சணம் நீதிபதிகளின் கவனத்தை ஈர்க்குமளவு இருக்கிறது!

அதுமட்டுமல்ல, தேர்தல் காலத்தில் மந்திரி சம்மந்தமில்லாமல், எல்லா இடங்களுக்கும் சென்று ஆதரவுதிரட்ட தங்கள் பதவியையும் கௌரவத்தையும் உபயோகித்துக்கொண்டதும், நீதிபதியின் கூர்ந்த கண்களிலிருந்து தப்பவில்லை. தேர்தல் காலத்தில் மந்திரி பதவியை விட்டுவிடாமல், மந்திரிகள் என்ற உரிமையுடன், காங்கிரஸ் ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று, அலைந்து, திரிந்து, மிரட்டுபவர்களை மிரட்டி அதிகாரத்தையும் பதவியையும் வைத்து மிரட்டி, காங்கிரசுக்கு ஆதரவு திரட்ட

யதை நாடு அறியும். எந்தெந்த மந்திரிகள், யார் யாரைக் கூப்பிட்டு மிரட்டுகிறார்கள், தேர்தல் தினத்தன்று எந்தெந்த தேர்தல் சாவடிகளில் உலவினார்கள், எந்தெந்த அதிகாரிகளுக்கு என்னென்ன வகையான கட்டளைகளை காங்கிரசுக்குச் சாதகமாக இட்டார்கள் என்பவைகள் அந்தந்தத் தொகுதிகளில் இருப்பவர்களுக்கு நன்கு தெரியும். அவ்வாறு, குடியாட்சி முறைக்கும் மந்திரி பதவிக்கும் மிகவும் அகௌரவமான செயல்களில் ஈடுபட்டார்கள். இவையெல்லாம் நாட்டினருக்கு மட்டுமல்ல நீதியின் கண்களுக்கும் பட்டுத்தான் இருக்க வேண்டும்.

நீதிபதி அவர்கள் தமது தீர்ப்பில் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்:

"தேர்தல் நடந்துகொண்டிருக்கும்போழுது, மாநில மந்திரிகள் மூலை முடுக்குகளிலுள்ள, போகமுடியாத சிறு கிராமங்களுக்குக்கூடச் சென்று, வசப்படுத்தும் வகையில் கேட்டு ஆதரவு பெறுவதைத் தங்களுடைய கௌரவத்திற்குக் குறைவாக நினைக்கவில்லை. நீதிமன்றப் பார்வையில் இதைப்பற்றிக் குறிப்பிடுவது சரியானதென்றே நான் நம்புகிறேன்."

தேர்தல் காலத்தில் மாநில மந்திரிகள் நடந்துகொண்ட முறைகள் கௌரவக் குறைவானவை. அது நன்றாகத் தெரிகிறது. மூலை முடுக்குகளில், சுலபத்தில் போகமுடியாத சிறு கிராமங்களுக்குக்கூட மந்திரிகள் சென்று "வசப்படுத்தும் வகையில்" ஆதரவு தேடியிருக்கிறார்கள். மந்திரிகள் செல்கிறார்கள். "வசப்படுத்தும் வகையில்" வாக்குகளைப் பெறுகிறார்கள். வசப்படுத்துவது என்றால் அவர்களிடம் ஏதாவது வசிய மருந்து இருந்ததா? வரப்பிரசாதமோ, தாயத்தோ, மந்திரவேரோ இருந்ததா, அந்த மந்திர வித்தையைக் காட்டியதும் கிராமத்து மக்கள் அப்படியே வசமாகி விடுவதற்கு? அவர்களிடம் மந்திர வித்தை இல்லை, "மந்திரி" வித்தை இருந்தது. அதை நன்றாக உபயோகித்து, தங்கள் கட்சிக்குக் கௌரவக் குறைவான முறையில் ஆதரவு திரட்டியிருக்கிறார்கள்.

மந்திரிகள் ஆட்சிக்காலத்தில் பாலம் திறக்கவும், மதகு திறக்கவும், ஓலைக்குடிசை திறக்கவும் ஊர்சுற்றிக் கொண்டிருக்கிறார்கள்; தேர்தல் காலத்தில் சுலபமாகப் போகமுடியாத கிராமங்களுக்குக்கூடச் சென்று "வசப்படுத்தும் வகையில்" கேட்டு ஆதரவு திரட்டுகிறார்கள். இதுதான் நாட்டு மக்களின் வரிப் பணத்தை வைத்துக்கொண்டு, மந்திரிகள் நடத்தும் அரசாங்க முறை!

"எல்லா மந்திரிகளும் திறப்புவிழா, திறப்புவிழா என்று ஊர்ஊராகச் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குப்பதில் மந்திரிசபையில் ஒருவரைப் பார்த்து திறப்புவிழாமந்திரி என்று ஆக்கிவிட்டால், திறப்புவிழா தவிர வேறுவேலை அவருக்கு இல்லாமல் செய்து, எல்லா திறப்புவிழாக்களையும் அவரைக்கொண்டு ஆற்றலாம்!" என்று அரவக்குறிச்சித் தொகுதியில் கழகச் சார்பில் போட்டியிட்ட தோழர் இரத்தினம் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அவர் சொல்கிறபடி, திறப்புவிழா மந்திரி என்று ஒருவரைக்கூட நியமித்துக்கொள்ளலாம்!

ஆனால் அதில் ஒரு தகராறு கிளம்பும். மற்ற காங்கிரசு மந்திரிகள் "எங்களுக்கு இனி என்ன முக்கியமான வேலை?" என்று கேட்பார்கள்!

"நாணயக் குறைவு"

—(o)—

யாரையாவது பேச்சில் மடக்க நினைத்தால், கடினமான குழப்பமான ஒரு கணக்கைப் போட்டுவிடுவது வழக்கம். "மூன்றேமுக்கால் காசுக்கு நாலேமுக்கால் வாழைக்காய் என்றால், நாலே முக்கால் காசுக்கு எத்தனை வாழைக்காய்?" என்று ஒரு கேள்வியைக் கேட்டால், பதில் உடனே சொல்ல முடியாது. பதில் சொல்லவேண்டியவர் குழப்பமடைவார்; பதில் சொல்ல வேண்டியவருக்குத்தான் தெரியாதென்றால் கேள்வி கேட்டாரே அவருக்காவது சரியானவிடை தெரியுமாஎன்றால், அவருக்குக் கேள்வி தெரியுமே ஒழிய அதற்குரிய விடை தெரியாதிருக்கும். கேள்விக்கு விடை கிடையாதா வென்றால், விடை காணமுடியும் பின்னக் கணக்கில் பெருக்கல்-வகுத்தலும், பேப்பர் பென்சிலும் இருந்தால், மூன்றே முக்கால் காசுக்கு நாலேமுக்கால் வாழைக்காய் என்றால், நாலே முக்கால் காசுக்கு உள்ள வாழைக்காய் எவ்வளவு என்று கண்டு பிடிக்கலாம். கேள்வி கேட்டவர் பதிலை எதிர்பார்க்கவில்லை ஒரு 'குழப்பம்' உண்டாக்கிவிட்டுப் போய்விடுகிறார்.

இப்பொழுது நாடெங்கும் ஒரு புதிய குழப்பம்—"நயா" குழப்பம் உண்டாகியிருக்கிறது. மூன்றே முக்கால் காசுக்கு நாலே முக்கால் வாழைக்காய் என்ற கணக்கைப்போட்டுக் குழப்புவார்களே, அதைப் போல, பழைய பைசாவுக்கும் "புதிய" பைசாவுக்கும் உள்ள கணக்கு குழப்பம் அடைகிறது. 192 பைசாவுக்கு (அதாவது ஒரு ரூபாய்க்கு) 100 'நயா பைசா' என்றால், 18 பைசாவுக்கு எத்தனை 'நயாபைசா' என்ற கேள்வி கேட்கப்படுகிறது. திகைப்பும் குழப்பமும்தான் அதற்குப் பதில்!

புதிய நாணயத்திற்கு மாறும் முறை ஒரு பெரிய குழப்பமென்றால், அந்தப் புதிய நாணயத்திற்கு அரசாங்கம் இட்டுள்ள பெயர் அதை விடப் பெரிய குழப்பமாயிருக்கிறது. புதிய காசை "நயா பைசா" என்று அரசாங்கம் பெயர் வைத்துள்ளது. இந்தப் பெயரைக் கட்டுப்பாடாக உபயோகத்தில் கொண்டுவர முயல்கிறது. ஒருமையில் அந்தப்பெயரும், பன்மையில் வேறு பெயரும் தருகிறது. 10 புதிய காசுக்களைச் சொல்ல, 10 "நயா பைசாக்கள்" என்று சொல்லக் கூடாதாம். பத்து "நயே பைசே" என்று அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு சொல்லவேண்டுமாம். "நயா பைசாவும்" வேண்டாம், "நயே பைசே" வும் வேண்டாம், புதிய நாணயங்களைக் "காசு"கள் என்று நாம் குறிப்பிடுவோம்.

புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள நாணய முறையில், அதன் பாகுபாட்டில் நமக்கு ஒன்றும் பகைமை கிடையாது. ஒரு ரூபாய்க்கு 16 அணு, ஒரு அணுவுக்கு 12 பைசா இன்று இப்பொழுதுள்ள நாணய விகிதம், மிகச் சிக்கலான முறைதான். கூட்டல், கழித்தல்களில் மிகச் சங்கடங்கள் உள்ளன. ஆனால் ஒரு ரூபாய்க்கு 100 காசுகள் என்ற முறையில் வரவு செலவுக் கணக்குகளைக் கூட்டிக் கழித்துப் பார்த்தல் சுலபமாகிறது. பெரும்பாலான மேலை நாடுகள்—இங்கிலாந்தைத் தவிர்த்து அநேகமாக மற்ற பெரிய நாடுகளெல்லாம் "ஒன்று" "பத்து" "நூறு" என்ற அடிப்படையில் நாணய முறையை வைத்துள்ளன. அந்த முறை எல்லாக் கணக்குகளுக்கும் எளிதாக இருக்கின்ற காரணத்தால், அது பெரும்பான்மையான நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் ரூபாய்க்கு 100 காசுகள் என்று புதிய முறை வந்துள்ளது விரும்பத்தக்கதே.

கொண்டு வரப்பட்டுள்ள நாணய விகிதம் வரவேற்கத் தக்கதென்றாலும், நாணய மாற்றத்தைக் காரணமாக வைத்து விலைவாசிகள் ஏற்றமடைந்துள்ளன. இதனால் பொது மக்கள் பெரும் கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் நேர்மையான முறையில் இருந்திருந்தால், வீணாக விலை வாசிகள் உயருவதைத் தடுத்து, பொது மக்களின் வாழ்க்கை வசதிகளைக் காப்பாற்றியிருக்கவேண்டும். ஆனால் இந்திய அரசாங்கம் அப்படிச் செய்யவில்லை. நாணய விகிதம் மாறுவதால் விலைவாசி உயர்வைத் தடுக்காமல் இருந்ததுமட்டுமல்ல, விலைவாசி உயர்வுகளுக்கு முதற் காரணமாக இந்திய அரசாங்கமே இருக்கிறது.

புதிய நாணய முறை அமுலாக்கப்பட்டதும் முதலாவதாக இந்திய அரசாங்கத்தின் தபால் இலாகா விலைவாசிகளை மாற்றியமைத்தது. அந்த மாற்றங்கள் பொது மக்களை-ஏழைபாழைகளைப் பாதிப்பதாக உள்ளது.

தபால் இலாகாவின் கீழ் பொதுமக்கள் ஏராளமான பணத்தைச் செலுத்தி, செய்திகளை அனுப்பிவருகிறார்கள். பொது மக்கள் ஒருவருக்கொருவர் செய்திகளை அறிவித்துக் கொள்ள முக்கிய சாதனங்களாக இருப்பவை **கார்டு, உள்நாட்டு உறை (இன்லண்டு லெட்டர்), கவர்** ஆகிய மூன்று வகைகளுமாகும். புதிய காசுகளை அமுலுக்குக் கொண்டுவந்தபொழுது இவைகளின் விலைகள் எப்படி மாறியிருக்கின்றன என்று கவனிக்கலாம்.

	பழைய விகிதம்.	புதிய விகிதம்.
கார்டு	முக்காலணு	5 காசு
உள்நாட்டு உறை	$1\frac{1}{2}$ அணு	10 காசு
கவர்	2 அணு	13 காசு

1-4-57-ல் புதிய காசுகள் அமுலுக்கு வந்த பொழுதே, மேலே காணப்படும் தபால் விலைகளும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டன. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் பொழுது புதிய விலைகளில் உள்ள மாற்றம் தெரியவில்லையென்றாலும், சற்றுக் கணக்கிட்டுப் பார்த்தால், கார்டு, உள்நாட்டு உறை, கவர் ஆகிய மூன்றும் விலை ஏறிவிட்டன.

முன்பு, முக்காலணு விதப்படி, **100** கார்டுகள் வாங்க ஒருவன் ரூ. **4-11-0** செலுத்தவேண்டும்; இனிமேல் **100** கார்டுகளை வாங்குவதற்கு புதிய விலைப்படி அவன் ரூ. **5** செலுத்தவேண்டியிருக்கும்.

முன்பு **100** உள்நாட்டு உறைகளை வாங்க ரூ. **9-6-0** செலுத்தவேண்டும். இனிமேல் **100** உள்நாட்டு உறைகளுக்கு ரூ. **10** செலுத்தவேண்டியிருக்கும்.

முன்பு 100 கவர்கள் வாங்க ரூ. 12-8-0 வேண்டும், இனிமேல் 100 கவர்கள் வாங்க ரூ. 13 செலுத்த வேண்டியிருக்கும்.

கார்டு, உள்நாட்டு உறை, கவர் ஆகிய மூன்றும் ஏழைகளின் செய்திச் சாதனங்களாகும். இந்த மூன்றின் மேலும் விலைகள் உயர்ந்து விட்டன. அதனால் ஏழைபாழைகளின்மீது போடப்படும் பாரம் அதிகமாகிறது. இதை அரசாங்கம்-காங்கிரசு அரசாங்கம் செய்துள்ளது.

வெள்ளைக்காரன் இந்த நாட்டைக் கொடுமைப்படுத்தினன், அந்தக் கொடுமைக்காரன் காலத்தில் கார்டு விலை அரையணு, கவர் விலை ஓரணு.

காங்கிரசுக்காரர்களின் "காருண்ய" ஆட்சி வந்ததும், கார்டு விலை முக்காலணுவாகியது; கவர் விலை ஒன்றரை அணுவாகி, பின் இரண்டணுவாகி விட்டது!

இப்பொழுது காங்கிரசு அரசின் "காருண்யத்" தனத்தால் நாணய மாற்றின் கீழ் அதன் விலை இன்னும் அதிகமாகி விட்டது!

பொது மக்களின் மீது போடப்படும் பாரம் அதிகமாகிக் கொண்டே போகிறது. இவ்வளவுக்கும், இருப்பது காங்கிரசின் "காருண்ய" சர்க்கார்!

நாணய விகிதம் மாறுவதைச் சாக்காக வைத்துக்கொண்டு, இந்த "நேர்மையான" அரசாங்கம் நேர்மையற்ற முறையில், ஏழை பாழைகளை வஞ்சிக்கும் விதத்தில், தபால் விலைகளை உயர்த்திவிட்டது. பழைய பைசாவுக்கும், புதிய காசுக்கும் ஏற்படும் மாற்றத்தில் பொதுமக்களுக்கு குறையேற்படாமல் அரசாங்கம் பாதுகாக்கவேண்டிய நியதிபோய், "வேலியே பயிரை மேய்ந்த கதைபோல நாணய மாற்றத்தினுல் முதல் லாபத்தை அடிக்க அரசாங்கம் முன்னேடிவந்துள்ளது!

பழைய பைசாவிற்கும் புதிய காசுக்கும் உள்ள உறவுபற்றி, அதாவது பழைய நாணய முறையை புதியகாசுமுறைக்கு மாற்றும் விதத்தை விளக்கி, இந்திய அரசாங்கம் அட்டவணைகள் வெளியிட்டுள்ளது. அட்டவணையில் பார்த்தால் இரண்டணுவுக்கு புதியவீதத்தில் 12காசு என்று அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது. ஆனுல் அதே அரசாங்கம் இரண்டணு கவரை 13காசு என்று மாற்றிக் கொண்டது. அட்டவணையில் விதித்த கணக்குக்குமேல் ஒருகாசு கூட்டிக்கொண்டது.

அதேபோல், அட்டவணையில் $1\frac{1}{2}$ அணுவுக்கு 9காசு என்று அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது. அதே அரசாங்கம் தான் விற்கும் $1\frac{1}{2}$ அணுவுள்ள உள்நாட்டு உறையை 10காசு என்று மாற்றிக்கொண்டது. அட்டவணையில் அரசாங்கம் நிர்ணயித்த அளவுக்கு மேல் ஒருகாசு கூட்டிக்கொண்டது!

கவரின் விலை 2அணுவிலிருந்து 13காசுக்கு மாற்றப்படுவதால், அந்தவகையில் மட்டும் ஆண்டொன்றுக்கு 42லட்சரூபாய் அதிகமாக அரசாங்கத்துக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கிறது.

42லட்ச ரூபாய் அதிகமாகக் கிடைக்குமென்றுல், பொதுமக்களிடமிருந்து அதிகமாக வசூலிக்கப்படுகிறது என்று அர்த்தம். பழைய அணு, பைசாவிலிருந்து, நயாபைசாவாக மாறும் பொழுதும், அரசாங்கம் மறைவாக, நைசாக அடித்துக்கொள்ளும் பணம் அது! இந்த 42லட்சம் தபால் கவர் விற்பதன் மூலம் மட்டும் அதிகமாகக் கிடைப்பதாகும். இதை விட அதிகமான அளவு கார்டு, உள் நாட்டு உறை இவைகளை விற்பதால் கிடைக்குமென நிச்சயமாகச் சொல்லலாம்.

நாணய மாற்றத்தில், ஒன்றைபொன்று சரியாகப் பொருத்தி விடமுடியாது. ஒரு முறைக்கும் மற்றொரு முறைக்கும் ஏற்றத்தாழ்வுகள் வரும். ஆனுல் அந்த ஏற்றத்தாழ்வுகளில், பொதுமக்களுக்கு எது சாதகமாக இருக்கிறதோ அதை அரசாங்கம் அளித்திருக்கவேண்டும். கார்டு, கவர் இவைகளின் விலை முன்பே அதிகமான அளவு கூடியிருக்கிறது. இப்பொழுது அரைக்காசோ, கால் காசோ விட்டுவிடுவதுதான் நல்லது. அதனுல் ஏற்படும் குறைகளை வேறு வகைகளில் ஈடுசெய்யவேண்டுமேயின்றி, விலை அதிகமாக இருக்கும் கார்டு கவர் விலைகளை மேலும் அதிகப்படுத்தி, பொதுமக்களின் மீது அதிகச் சுமையை ஏற்றி வைப்பது நல்லதல்ல.

மக்களுக்குத் தெரியாமல், மக்கள் சபையில் விவாதிக்கப்படாமல், மிக எதேச்சாதிகார முறையில் அரசாங்கம் தபால் விலைகளை நிர்ணயித்துள்ளது. அது நிர்ணயித்துப் பிறருக்குத் தந்த பழைய பைசா-புதிய காசுக்கு உள்ள கணக்கைக்கூடப் பின்பற்றுமல், ஒரு காசு இரண்டுகாசு அதிகப்படுத்தி அது விலைகளை உயர்த்திவிட்டது கண்டிக்கத்தக்கது. அரசாங்கம் பொறுப்பற்ற முறையில், நேர்மையற்றமுறையில், தான்தோன்றித் தனமான முறையில் நடந்துகொண்டுள்ளது. இதே விதமான போக்கு இரயில்வே கட்டணங்களிலும் செய்யப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை. நாணய மாற்று முறையில், அதனுல் ஏற்படும் நன்மைகளை எண்ணிப் பார்க்கமுடியாதபடி, அதை வைத்து அதிக வருமானம் தேடிக் கொள்ளவே அரசாங்கம முயன்றுள்ளது.

நாணய மாற்று முறையில், இந்திய அரசாங்கம் "நாணயக் குறைவாக" நடந்துள்ளது. இது மிகவும் வருந்தத்தக்கது.

இடம் மாறுவதேன்?

★

சட்டசபையை மீண்டும் கோட்டைக்குள் கூட்டுவதென சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது. கடந்த சில ஆண்டுகளாக சட்டசபைக்கெனத் தனியாகக் கட்டப்பட்ட கட்டிடத்தில் சட்டசபைக் கூடுவதைத் திடீரென்று மாற்றி, கோட்டைக்குள் பழைய இடத்துக்குக் கொண்டுபோக அரசாங்கம் தீர்மானித்து விட்டது.

முதலில், கோட்டைக்குள் இடநெருக்கடி அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தினால் சட்டசபை கூடுவதற்குப் புதியதொரு இடம் அரசாங்கத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதன்படி, சென்னை அரசாங்க மாளிகைக்கு அருகில் சுமார் பத்துலட்சம்ரூபாய் செலவில் புதிய கட்டிடம் சட்டசபை கூடுவதற்கென கட்டப்பட்டது. பழைய இடத்திலிருந்த நெருக்கடி தவிர்க்கப்பட்டு, புதிய இடத்தில் எல்லா வசதிகளும் சேர்த்து வைக்கப்பட்டன. வழக்கமாகக் கூடிவந்த அந்த இடத்தைவிட்டு, பழைய இடநெருக்கடியுள்ள கோட்டைக்குள்ளேயே சட்டசபை கூடவேண்டுமென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது!

இந்த இடமாற்றத்திற்கு அரசாங்கம் மிக வேடிக்கையானதொரு காரணத்தைத் தருகிறது. இப்பொழுதுள்ள கட்டிடம் அதாவது மவுண்டுரோடில் அரசாங்க மாளிகைக்கருகில் உள்ள கட்டிடம், கேரளம், ஆந்திரம் இவைகள் பிரியாததற்குமுன் இருந்த சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை வைத்து, 300 பேர்களுக்கு வசதியுள்ளதாகக் கட்டப்பட்டது. ஆனால் இப்பொழுது சென்னை சட்டசபை உறுப்பினர் எண்ணிக்கை 200க்கும் குறைந்துவிட்ட காரணத்தால் அவ்வளவு பெரிய இடம் தேவையில்லையெனவும், பழைய சிறிய இடம் போதுமானதென்றும், எனவே கோட்டைக்குள் திரும்பவந்து விட்டதாகவும் ஆளவந்தார்கள் காரணம் கூறுகிறார்கள்!

காட்டப்பட்ட காரணம் எவ்வளவு பைத்தியக்காரத் தனமானது என்பது, சற்று கவனித்தால் தெரியும். இருக்கிற இடம் சிறிதாக நெருக்கடியாக இருந்தால்தான் மற்றொரு பெரிய இடத்துக்குப் போகவேண்டுமென்ற அவசியம் உண்டாகும். ஆனால் சென்னை அரசாங்கம், பெரிய வசதியான இடத்தில் இருந்து இடம் அதிகமாக இருக்கிறதென்ற காரணத்தினால், சிறிய இடத்துக்குப் போகத் தீர்மானித்துள்ளது!

சென்னை அரசாங்கப் பகுதியினர் விரிவடைந்து அலுவல்கள் பெருகியிருக்கிறபடியால், கோட்டைக்குள் இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. அந்தக் காரணத்தினால் தான் முன்பு சட்டசபை வேறிடத்திற்கு மாற்றப்பட்டது. அப்பொழுது இருந்ததைவிட இப்பொழுது நெருக்கடி அதிகமாயிருக்குமேயன்றி குறைந்திருக்காது. இந்த நிலையில் அங்குள்ள நெருக்கடியை அதிகமாக்கும் விதத்தில் சட்டசபையும் அதனுடனிருக்கும் மற்ற அமைப்புகளும் குழுக்களும் கோட்டைக்குள் புகப்போகின்றன.

இப்பொழுதுள்ள இடம் பெரியதாக, வசதியாக இருக்கிறதென்றால் அதனால் என்ன குறை வந்துவிட்டது? சட்டசபைக் கூடுமிடம் வசதியாக இருக்கவேண்டுமென்றுதான், 10 லட்ச ரூபாய் செலவு செய்து புதிய கட்டிடத்தைக் கட்டி முடித்தார்கள். ஆனால், அந்த பத்து லட்ச ரூபாய் கட்டிடத்தை விட்டு, மீண்டும் பழைய இடத்துக்குப் போக சர்க்கார் முடிவுசெய்துள்ளது.

இப்பொழுது இருக்கும் இடத்தைவிட்டுப் போவதால், அதற்காகச் செலவிடப்பட்ட பத்து லட்ச ரூபாய் வீணாகிவிடுகிறது. அது வீணாவதுமட்டுமல்ல, சட்டசபைக்கூடுமிடத்தைக் கோட்டைக்கு மாற்றுவதால் அங்கு இடம் சரிபார்த்து புதிய அமைப்பை உண்டாக்க ஆறு லட்சரூபாய் செலவிடப் போகிறது இந்த அரசாங்கம்! பத்துலட்சரூபாய் கட்டிடம், சட்டசபைக் கூடுவதற்கென்றே கட்டப்பட்ட அமைப்பு, அதை வீணாகவிட்டு மேற்கொண்டு ஆறுலட்ச ரூபாய்களுக்குச் செலவு வைத்து, அரசாங்கம் சட்டசபையை மாற்றுகிறது.

இவ்வாறு புதிய கட்டிடத்தை விட்டு கோட்டைக்குள் மீண்டும் போவதற்கு சென்னை

(இதன் தொடர்ச்சி 34-ஆம் பக்கம் பார்க்க)

இனிதினும் இனிது!

இரா. நெடுஞ்செழியன்

தலைவனும் தலைவியும், பகற்பொழுதில், சில குறிப்பிட்ட இடங்களில் தனியே கண்டு அளவளாவி மகிழ்வதற்கான வழிவகைகளைத் தோழி செய்துவருகிருள்.

தலைவனும் தலைவியும் அன்ருடம் சோலையிலும்,சோலையிலும், மலைச்சாரிலிலேயும், மடுவின் பக்கத்திலேயும், ஆற்றங்கரையிலும், அருவியின் அருகிலும் கூடிக்குலாவியிருந்து இனிதே காலத்தைக் கழித்துவருகின்றனர்.

ஒருநாள் தலைவன் ஏதோவொரு எதிர்பாராத காரணத்தால் தலைவியைக்காண வராமல் நின்றுவிடுகிருன். தன் ஆருயிர்க்காதலனைக் காணுமல் தலைவி வாடியகொடிபோல் துவண்டு உட்கார்ந்து விடுகிருள்.

தலைவியின் வாட்டத்தைக் கண்ட தோழி "தலைவர் நாளை வந்துவிடுவார்! ஏதோ காரணத்தால் இன்று வரவில்லை! எதிர்பாராத நிகழ்ச்சி ஏதேனும் எதிர்ப்பட்டுவிடுவது இயற்கைதானே! இன்று ஒருநாள் அவர் வரவில்லை என்பதற்காக நீ ஏன் இவ்வளவு வருந்த வேண்டும்! இவ்வளவு நாட்கள் அவரோடு நீ நெருங்கிப்பழகியும், அவர் உன்னிடம் வைத்திருக்கும் அன்பின் அளவை இன்னமும் உணராமலிருக்கிருயே! உன்னை விட்டுவிட்டு அவர் எங்கே போய்விடப்போகிருர்! எப்படியும் நாளை அவர் வந்துவிடுவார், நீ ஒன்றுக்கும் அஞ்சாதே!'' என்று ஆறுதல் மொழி கூறித் தேற்றுகிருள்.

அது கேட்ட தலைவி, தலைவன் மறுநாள் எப்படியும் வந்துவிடுவான் என்ற நம்பிக்கையில் சற்று ஆறுதல் பெறுகிருள்.

தலைவன் மறுநாளும் வந்தபாடில்லை. தலைவியின் நம்பிக்கை தூள்தூளாகப் பறந்து போகவே, அவள் மனமொடிந்து சோர்ந்து போய்விடுகிருள். அவளுக்கு என்ன ஆறுதல் சொல்லித் தேற்றுவது என்று புரியாமல் தோழி திகைக்கிருள். எப்படியும் அவளுக்கு ஆறுதல் கூறித் தேற்றுவது தன் கடமை என்று உணர்ந்து, பலவாருக ஆறுதல் மொழி பகருகிருள். தலைவன் தொடர்ந்து சில நாட்கள் வராமல் போகவே, தலைவி ஏக்கமும் தூக்கமும் மிகவாகக் கொண்டு உடல் மெலிந்து, ஒளியிழந்து காணப்படுகிருள்.

தலைவி தன்னைத்தானே தேற்றிக்கொள்ள எவ்வளவோ முயன்று பார்த்தும், அவளால் முடியவில்லை. தலைவியின் உடல் வேறுபாட்டைத் தாயோ அல்லது செவிலியோ அறிந்துவிட்டால், அவர்கள் காரணத்தைப் புரிந்துகொண்டு, அவளை வீட்டிற்குள்ளேயே சிறைப்படுத்தி வைத்துவிடுவார்களே என்ற கருத்தைத் தோழி மெல்ல தலைவியிடம் கூறுகிருள். அப்படியொரு நிலை ஏற்பட்டுவிட்டால், தான் அறவே தன் அன்பிற்குரிய காதலனைக் காண முடியாமற்போய்விடுமே என்று எண்ணித் தலைவி கண்கலங்குகிருள்.

தன் உடல்வேறுபாட்டைக் கொண்டு, தனக்கும் தலைவனுக்கும் இருக்கும் நெருங்கிய காதலுறவைத் தாய்தந்தையர்கள் எப்படியேனும் அறிந்துகொண்டு விடுகிருர்களோ என்று எண்ணி வருந்தும் தலைவி, அந்த நெருக்கடி நிலையினின்றும் தப்பித்துக்கொள்ள வழியேதும் கண்டுபிடிக்கும்படி தோழியை வற்புறுத்திக்கெஞ்சிக்கேட்டுக்கொள்ளுகிருள். வழி ஒன்று காண, தோழி தன் சிந்தனையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிருள். தாய் தந்தையர் தலைவியை உற்றுக் கவனித்துவிடாதவாறு, அவளைத் தக்கமுறையில் பாதுகாத்து வருகிருள் தோழி.

தலைவியைப் பற்றி அவளது தாயும், தந்தையரும் என்ன எண்ணிக்கொண்டிருக்கிருர்கள்

என்பதைக் கண்டறிய தோழி ஒருநாள் அவர்களிடம் செல்லுகிருள்.

தாயும், தந்தையும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்க, தோழி அங்கு வருகிருள். அந்த நேரத்தில் ஏவலாள் ஒருவன் ஓடிவந்து "நமது மலைச்சரிவிலேயுள்ள தினைப்புனத்தில் பசுங்கிளிகள் கூட்டங்கூட்டமாக வந்து தினைக் கதிர்களைக் கொத்தித் தின்னுகின்றன! கிளிகளை இப்படியே விட்டுக்கொண்டிருந்தால், பயிர்களெல்லாம் பாழாவது திண்ணம்! தினைப்புனத்தைக் காவல்காப்பதற்கு என்று யாரையேனும் அனுப்பிவைத்தால்தான் சிறிதளவு பயிராவது எஞ்சும்!" என்று கூறுகிருன்.

தந்தை காவல் காப்பதற்கு யாரை நியமிப்பது என்று ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது, தாயானவள், "நமது பெண்ணையும், அவளது தோழியாகிய இவளையும் அனுப்பிவைத்துவிடலாம்! இதற்காக வேறு யாரை நாம் தேடப்போகிருேம்?" என்று சொல்லிவிட்டு, உடனே தோழியைத் திரும்பிப் பார்த்து, "ஏடீ! கொடிச்சி! நீ உன் தோழியாகிய என மகளை அழைத்துக்கொண்டு, கிளியை விரட்டும் கருவியாகிய தட்டையை எடுத்துக்கொண்டு உடனே தினைப்புனத்திற்குப் போ! சிறிதுகூட நேரம் போக்காதே! உடனேபோ!" என்று கூறினுள்.

தினைப்புனங்காக்கும் தொழில் தமக்கு ஏற்பட்டதற்காக அவள் உள்ளூற மகிழ்ச்சி கொண்டு, ஆனல் அதனை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டால் தாய்தந்தையர் ஐயப்பட்டுக்கொள்வார்களோ என்று அஞ்சித் தினைப்புனங் காக்கச் செல்வதில் தமக்குச் சிறிதும் விருப்பமில்லாததுபோல் காட்டிக்கொள்ள முனைகிருள்.

"தினைப்புனங்காக்க நானே, தலைவியோ போகமாட்டோம்! எங்களுக்கு அச்சமாக இருக்கிறது!" என்று தோழி கூறுகிருள்.

"கிளிகளை விரட்டுவதில் அச்சப்படுவதற்கு என்ன இருக்கிறது? நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம், போய் வாருங்கள்! நான் வேளாவேளைக்குச் சோறும் தின்பண்டங்களும் கொடுத்தனுப்புகிறேன்!" என்கிருள் தாய்.

"நாங்கள் கிளிகளுக்காக ஒன்றும் அஞ்சவில்லையே! களிறுகளோ அல்லது கானையரோ அந்தப் பக்கம் வருவார்களோ என்றுதான் அஞ்சுகிருேம்!" என்கிருள் தோழி.

"இந்த மலையில் களிறுகள் இல்லையாதலால், அவற்றை வேட்டையாடுவதற்கென்று கானையரும் வரமாட்டார்கள். எனவே நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டாம்!" என்கிருள் தாய்.

"நாங்களிருவரும் பருவப் பெண்களாக இருக்கிருேமே! தன்னந்தனியாகப் போகலாமா என்பதற்காகத்தான் பார்க்கிறேன்!" என்கிருள் தோழி.

தந்தை அவள் அருகேவந்து, அவளுடைய மாந்தளிர் போன்ற மேனியையும், வளையல்களணிந்த மென்கையையும் தடவிக்கொடுத்து, உச்சிமோந்து முத்தங்கொடுத்து, "பெண்ணே! மகளோடு நீ விரைவாகப்போ, பார்க்கலாம்!" என்று இனிய சொற்களால் விரும்பிக் கேட்டுக்கொள்கிருர். தோழியும் இதுதான் நேரம் என்று கருதிக்கொண்டு, மகிழ்ச்சியோடு விடைபெற்றுக் கொண்டு, தலைவியை நோக்கி ஓடுகிருள்.

தோழி குதியாட்டம் போட்டுக்கொண்டு, மகிழ்ச்சியோடு கைகளைத் தட்டிக்கொண்டு தலைவி முன் வந்து நிற்கிருள்.

தோழியின் மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன என்று தலைவியால் எடுத்தவுடனேயே புரிந்துகொள்ள முடியவில்லை.

"தலைவர் வந்துவிட்டாரா?" என்று தலைவி தோழியைக் கேட்கிருள்.

"அவர் வரவில்லையடி!" என்கிருள் தோழி.

"பின் எதற்கு இவ்வளவு குதியாட்டம் போடுகிருய்?" என்று வினவுகிருள் தலைவி.

"நாம் அவரைக் காணப் போகிருேம்!" என்கிருள் தோழி.

"எப்படியடி?" என்று கேட்கிருள் தலைவி.

"நாம் தினைப்புனத்திற்குப் போகப்போகிருேம்! அங்கே அவரைக் காணப்போகிருேம்!" என்கிருள் தோழி.

"அவர் அங்கு வரச்சொல்லி உன்னிடம் கூறினரா?" என்று வினவுகிருள் தலைவி.

"உனது தாயும் தந்தையுந்தான் நம்மை அங்கே போகச் சொல்லியிருக்கிருர்கள்!" என்கிருள் தோழி.

நீ சொல்லுவது எனக்கு ஒன்றும் புரியவில்லையே! விளக்கமாகத்தான் சொல்லேன்?" என்கிருள் தலைவி.

"நான் தாய் தந்தையர் நம்மைப்பற்றி என்ன நினைக்கிருர்கள் என்று அறியச் சென்றிருந்தேன். அவர்கள் நம்மைத் தினைப்புனத்திற்குச் சென்று கிளிவிரட்டும் கருவியால் கிளிகளை விரட்டித் தினைப்புனத்தைக் காவல் காக்கும்படி பணித்தார்கள். நான் காவலுக்குச் செல்லமாட்டாதவள்போல பாசாங்குக்காகச் சில சொற்களைக் கூறினேன். அவர்கள் மேலும் மேலும் வலிய வந்து இனிய சொற்களைச் சொல்லித் தினைப்புனத்திற்குச் செல்லுமாறு வற்புறுத்திக் கூறினர்கள். இனித்

தினைப்புனத்திற்குச் சென்று நீ உன் காதலரைக் காண்பதற்கு எளிதில் இடம் கிடைக்குமல்லவா? அதனால்தான் நான் மிக்க மகிழ்ச்சியால் குதிக்கிறேன்!" என்கிறாள் தோழி.

தலைவன் வருவதற்கு குறி செய்திருந்த தினைப்புனத்திடத்தே, தான் சென்று காவல் புரிவதற்கான நிலைமை ஏற்பட்டது அறிந்து தலைவி மகிழ்ச்சியுறுகிறாள்.

"இந்த நிகழ்ச்சி இனியதிலும் இனியது என்று சொல்லத்தக்கதாக இருக்கிறதல்லவா?" என்று தோழி வினவுகிறாள்.

தலைவி அதனை ஏற்றுப் புன்சிரிப்பால் விடையளிக்கிறாள்.

பின்னர் இருவரும் கிளிவிரட்டும் கருவிகளை ஏந்திக் கொண்டு மகிழ்ச்சியோடு தினைப்புனம் நோக்கிச் செல்கிறார்கள்!

இது நற்றிணை 134 ஆம் செய்யுளின் உட்கருத்தைக்கொண்டு தீட்டப்பட்ட சொல்லோவியமாகும். இந்தச் செய்யுள் இல்லிலே சிறை வைப்பாரென ஆற்றமாட்டாத தலைவியை அப்படிச் செய்யமாட்டார் என்பதுபடத் தோழி சொல்லியது என்னும் பிரிவைக் கொண்ட குறிஞ்சித் திணையைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றிய புலவர் யார் என்று தெரியவில்லை.

இனிதின் இனிது தலைப்படும் என்பது
இதுகொல் வாழி தோழி காதலர்
வருநறி செய்த வரையகச் சிறுதினைச்
செவ்வாய்ப் பாசினங் கடீஇயர் கொடிச்சி
அவ்வாய்த் தட்டையொடு அவணை யாகென
ஏயள்மன் யாயும் நுந்தை வாழியர்
அம்மா மேனி நிரை தொடிக் குறுமகள்
செல்லா யோநின் முள்ளெயிறு உண்கென
மெல்லிய இனிய கூறலின் இனியானஃது
ஒல்லேன் போல உரையா டுவலே

[நற்றிணை-134]

[பொழிப்புரை: தோழீ! வாழ்வாயாக! நம் காதலர் வருவதற்குக் குறிசெய்த மலையிடத்துள்ள சிறிய தினைப்புனத்தே விழுகின்ற சிவந்த வாயையுடைய பசுங்கிளியின் கூட்டங்களை ஓட்டும் பொருட்டு என்னை நோக்கிக் 'கொடிச்சீ! நீ அழகமைந்த கிளிவிரட்டும் கருவியாகிய தட்டையைக் கைக்கொண்டு அத்தினைப்புனத்துக்குச் செல்வாயாக' என்று அன்னையும் பலமுறை மிகுதியாக ஏவினள்; அல்லாமலும் உன்னுடைய தந்தை என்னைக் கூவி அழகிய மாந்தளிர் போன்ற மேனியையும், நிறைத்த வளையையுமுடைய இளமடந்தாய், நீ புனத்தின்கண்ணே செல்லவில்லையோ, விரைவிலே சென்றுபார்; உன் கூரிய பற்களின் மேல் முத்தம் கொடுப்பேன் என்று மெல்லியவாகிய இனிய சொல்லைக் கூறுதலினால், நான் இன்னும் பலகால் நம்மைவேண்டி அவர்களே புனத்தின்கண்ணே கொண்டு சென்று காவலில் புகுத்துமாறு கருதி அப்படிக் காவலுக்குச் செல்லமாட்டேன் போலச் சில வார்த்தையாடுவேனாயினேன், ஆதலின், இனித் தினைக் கொல்லையிலே சென்று காதலனைக் கூடியிருப்பாம் என்பதற்கு அறிகுறி இதுதானே? இங்ஙனம் நிகழ்ந்த இஃது இனிய ஒரு பொருளைக்காட்டிலும் இனியதாகும்.

பாசினம்-பசுங்கிளிக் கூட்டம்; ஒல்லேன்-மாட்டேன்.]

தக்க பருவமடைந்த தலைவி தாய் தந்தையரால் வீட்டிலேயே சிறைப்படுத்துவதற்கு எவ்வளவு அஞ்சுகிறாள் என்பதும், அந்தத் துயரைக் களைவதற்குத் தோழி என்ன என்ன வழிவகைகளைத் தேடுகிறாள் என்பதும் தலைவியைத் தலைவரோடு சேர்ப்பதற்குத் தோழி எப்படியெல்லாம் முயற்சி எடுத்து வெற்றி பெருகிறாள் என்பதும் இச்செய்யுளால் அழகுறக் குறிப்பாக உணர்த்தப்படுகின்றன. களவொழுக்க இன்பத்தை நுகர்வதிலே தலைவி எவ்வளவு முனைப்பாக இருக்கிறாள் என்பதும் தெரியவரும்.

பருவம் வந்த பெண்ணைத் தினைப்புனங் காக்கும் தொழிலிலே ஈடுபடுத்துதல், தினைக் கதிர்களைக் கொத்தித் தின்ன வரும் கிளியின் கூட்டங்களைக் கருவிகொண்டு விரட்டியடித்தல், காதலர்கள் பகற்குறி யிடங்களில் பற்களில் முத்தம் கொடுத்தல் ஒருவரை ஒருவர் எதிர்படுதல் போன்ற பழக்கங்கள் உணர்த்தப்படுகின்றன.

உடலின் நிறத்திற்கு மாந்தளிரை உவமையாகக் காட்டியிருப்பது போற்றுதற்குரியதாகும்.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

வானம்பாடி

(செல்வன்)

ஷெல்லிக்கு பணம் அனுப்பி உதவிய அவனது தங்கைகள் பணத்தை நேரடியாகக் கொடுக்க முடியவில்லை. அண்ணன் தங்கைகளைக் காணமுடியாதவாறு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருந்தன. தங்களுடன் பயிலும் பள்ளித் தோழி ஹாரியட் என்ற இளம் பெண்ணின் மூலம் பணத்தை ஷெல்லிக்குச் சேர்ப்பித்தனர். இந்தத் தொடர்பு நாளடைவில் வளர்ந்தது. ஷெல்லி ஹாரியட் மீது காதல் கொண்டான்.

இதற்கிடையில் தனக்கும் தந்தைக்கும் உள்ள உறவைத் துண்டித்துக்கொள்ள விரும்பினான் ஷெல்லி. தனக்கு மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகை மட்டும் செலவிற்காகக் கொடுத்தால் போதும் என்றும், அது தவிர தன் தந்தை சொத்தில் தனக்கு எந்தவித பாத்யதையும் வேண்டாம் என்றும் கூறினான் ஷெல்லி. குடும்பத் தொடர்பையே கிள்ளி எறிய முற்படும் மகனின் போக்கைக்கண்டு மனம் வருந்திய டிமோதி நார்போக்பிரபு மற்றும் தன் நெருங்கிய நண்பர்கள்மூலம் ஷெல்லிக்கு அறிவுரை புகட்ட முயன்றார், முடியவில்லை.

ஷெல்லி அவரது தூரத்து உறவினரான காப்டன் பில்போல்டு என்பவரால் சஸ்ஸெக்ஸ்ஸுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஹாக் ஷெல்லியை விட்டுப் பிரிந்து சட்டம் பயில தந்தையின் சொற்படி யார்க்குக்குச் சென்றபிறகும் ஷெல்லியுடன் கடிதத் தொடர்பு கொண்டிருந்தான். இக் காலத்திய கடிதங்களில் பெரும் பகுதி நமக்குக் கிடைக்க வில்லை. கிடைத்த சில பகுதிகளிலிருந்து ஷெல்லியின் கடிதம் முழுதும் உண்மையைத் தேடி அலையும் அவாவைவெளிப்படுத்துகின்றன. ஒருகடிதத்தில் "கிருத்து மதம், நம்பிக்கையை வலியுறுத்துவதை ஒழுக்கத்துறைக்குரிய கடமை யாக்குகிறது. நம்பிக்கை விருப்பத்திற்குட்பட்டதல்ல. ஆதலால் கிருத்து மதம் அடிப்படையிலேயே நல்லிணக்கமல்லாததாக இருக்கிறது. மதம் ஒரு வெறுப்பூட்டத்தக்கமுறை. கொடிய ஒரு தலையான எண்ணத்திற்கும், தற்பயத்திற்கும் பிறந்த குழந்தைதான் மதம்" என்று ஷெல்லி குறிப்பிட்டிருந்தான். பில்டு பிளேஸில் பொழுது போக்குவது மிகக் கடினமாக இருந்தது. ஷெல்லி அங்கிருந்து தாமஸ் குமராவின் தெற்கு வேல்ஸுப் பகுதியில் இருக்கும் பண்ணை வீட்டிற்குச் சென்றான்.

ஹாரியட்டுக்கும் ஷெல்லிக்கும் இடையே வளர்ந்த தொடர்பு பெருகியது. ஹாரியட்டின் பள்ளியில் உடன் பயில்பவர்கள் ஷெல்லியுடன் பழகுவதற்காக அவளைத் தள்ளிவைத்தனர். பள்ளியாசிரியர்களும் ஹாரியட்டைக் கண்டித்தனர். விடுமுறை முடிந்து பள்ளி திரும்புவதை ஹாரியட் விரும்ப வில்லை. ஆனால் அவள் தந்தை ஹாரியட்டை பள்ளிக்குச் செல்லுமாறு வற்புறுத்தினார். இந்நிலையில் செய்வதறியாது திகைத்த ஹாரியட் ஷெல்லிக்கு கடிதம் எழுதி லண்டனுக்கு வரவழைத்து வீட்டை விட்டு வெளியேறி ஷெல்லியுடன் சென்று வாழ நினைத்து அவனை லண்டனுக்கு வரவழைத்தாள். லண்டனுக்கு வந்த ஷெல்லி தன் நண்பர்களிடமிருந்து சிறிது பணம் கடனாகப் பெற்று ஹாரியட்டுடன் ஒருவருக்கும் தெரியாமல் எடின்பார்க்குக்குச் சென்றான். அங்குச் சில நாட்கள் தங்கியிருந்தான். ஹாக்கிற்கு விடுமுறை ஆரம்பித்ததும் எடின்பார்க்கு வந்து சில நாட்கள் தங்கிய பிறகு மூவரும் பார்க்குக்குச் சென்றனர். டிமோதி ஷெல்லி ஹாரியட்டுடன் ஷெல்லி வெளியேறியதைத் தெரிந்து பணம் அனுப்புவதை நிறுத்திக்கொண்டார். யார்க்கில் ஹாக்குடன் ஏற்பட்ட மன வருத்தம் காரணமாக ஷெல்லி ஹாரியட் அவள் தங்கை எலிஸா இவர்களுடன் கெஸ்விக் என்னுமிடத்திற்குச் சென்றான். கெஸ்விக்கில் பணத்திற்காக மிகவும் சிரமப்பட்டான். அதையறிந்த ஹாரியட்

டின் தந்தை சிறிது பணம் அனுப்பி உதவினர். நார்போக் பிரபுவின் உதவியால் டிமோதி ஷெல்லி தன் மகனுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை கொடுத்துஉதவ ஒப்புக்கொண்டார். 1812-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஷெல்லி தன் குடும்பத்துடன் அயர்லாந்து நாட்டின் விடுதலைக் கிளர்ச்சியில் பங்கு பெறும் நோக்குடன் டப்ளின் நகரையடைந்தான். புரட்சிக் கிளர்ச்சியில் ஆர்வம் கொண்ட அயர்லாந்து மக்கள் ஷெல்லியின் திட்டங்களை விரும்பவில்லை. ஆகையால் ஷெல்லி மனத்தாங்கலுடன் ஏப்ரல் மாதத்தின் தொடக்கத்தில் டப்ளின் நகரை விட்டு வெளியேறி பல இடங்கள் சுற்றிய பின் தெற்கு வேல்ஸ்ஸில் ரயாடர் என்னும் இடத்தில் பெரும் பண்ணை வீடு ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அதில் வாழ்ந்தார்கள். பணக்கவலை அதிகமாகவே ரயாடரிலிருந்து கிளம்பி லென்மவுத் என்னுமிடத்தில் குடியேறினார்கள். மதக் கருத்து வேறுபாடு காரணமாகத் தண்டிக்கப்பட்ட டானியல் ஐசக் ஈடன் என்பவரை ஆதரித்தும் அவரைத் தண்டித்த நீதிபதியான லார்டு 'எல்லன்பரோவுக்கு கண்டனக் கடிதம் ஒன்றைத் தீட்டினார். இதன் விளைவாக அரசாங்கத்தின் கண்காணிப்புக்கு ஆளான ஷெல்லி லென்மவுத்தை விட்டு வெளியேறி இல்பராகோம் என்ற இடத்திற்குச் சென்றார்.

இல்பரா ஹோமுக்குச் செல்லும் வழியில் டிரெமடாக் என்னுமிடத்தில் தங்கினார்கள். வில்லியம் அலெக்சாண்டர் மேடாக் என்ற பாராளுமன்ற உறுப்பினருடன் சேர்ந்து அவர் துவங்கிய சமூகப் பணிகளில் பங்குபெற்றான். கடன்பளு தாங்காமல் கைதி செய்யப்பட்டு பிறகு விடுதலை செய்யப்பட்டான், அங்கிருந்து அயர்லாந்து சென்று உடனே திரும்பவும் லண்டன்மாநகரை யடைந்து வாழ்ந்து வந்தான். ஷெல்லியினுடைய 'க்வீன் மாப்' என்ற புத்தகம் லண்டனில் வெளியிடப்பட்டது. ஷெல்லிக்கு 1813-ஜூன்மாதம் ஒரு பெண்குழந்தை பிறந்தது. 'க்வீன மாப' என்ற கதைத் தலைவியான இயான்த்தே என்ற பெயரையே தன் மகளுக்குச் சூட்டி மகிழ்ந்தான். இச்சமயத்தில் ஷெல்லி தன் பொருளாதாரச் சீர்கேட்டைச் சரி செய்யும் நோக்குடன் தன் தந்தையுடனும் லண்டன் நகரிலுள்ள வேறுபலருடனும் அடிக்கடி தொடர்புகொள்ள வேண்டியிருந்த காரணத்தால் அன்பு மனைவியையும் அருமைக்குழந்தையையும் விட்டுப்பிரிந்து அடிக்கடி லண்டனில் தங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. கடன்காரர்களின் தொல்லையைத் தவிர்க்கும் பொருட்டு குட்வின் குடும்பத்தாருடன் தங்கியிருந்தார். குட்வின் மகளான மேரி குட்வின் என்ற இளமாதுடன் ஷெல்லிக்குத் தொடர்பு ஏற்பட்டு வளர்ந்தது. குட்வின் ஷெல்லியின் போக்கைக் கண்டித்ததுடன் மேரியும் ஷெல்லியும் சந்திக்க முடியாதவாறு செய்தார். ஹாரியட்டிற்கும் இச்செய்தி தெரியவந்தது. இரண்டாவது குழந்தையை வயிற்றில் சுமந்து கொண்டிருந்த ஹாரியட்டிற்குப் பேரிடியாக இருந்தது இந்தச் செய்தி. 1814ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 21ம்நாள் ஷெல்லி மேரியுடன் லண்டனைவிட்டுக்கிளம்பி இங்கிலாந்தை விட்டு வெளியேறி பிரான்ஸுக்கு வந்தான். பிரான்ஸிலிருந்து சுவிட்சர்லாந்துக்குச் சென்று மறுபடியும் செப்டம்பர் திங்களில் இங்கிலாந்துக்குத் திரும்பினான். ஹாரியட்டை சந்தித்து மேரியுடன் ஒரு குடும்பமாக வாழலாம் என ஷெல்லி வலியுறுத்தினான். ஆனால் ஹாரியட் சம்மதிக்கவில்லை. கடன்காரர்களின் தொல்லையும் பெருகியது. எந்த நேரத்திலும் தான் கைதுசெய்யப்படலாம் என்ற பயத்தில் அடிக்கடி இருப்பிடத்தை மாற்றிவந்தான்.

மேரியும் கருவுற்றிருந்தாள். இங்கிலையில் ஏறத்தாழ பதினாறு நாட்கள் ஷெல்லி மேரியைப்பிரிந்து கடன்காரர்களின் கண்ணுக்குத் தெரியாமல் வாழ்ந்தான். நவம்பர் திங்களில் ஹாரியட்டிற்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த ஒரு வாரம் கழித்து ஷெல்லிக்கு உருக்கமான கடிதம் ஒன்று தீட்டினள் ஹாரியட். ஷெல்லி சென்று பார்த்தான். ஆனால் மறுபடியும் அவர்கள் சேர்ந்து வாழ்வது என்பது முடியாத ஒன்றாகிவிட்டது. ஹாரியட்டிற்கு ஷெல்லி பணம் அனுப்புவதும் நின்றது. தன் தந்தை வீட்டில் வாழ்ந்த ஹாரியட் அச்சூழ்நிலையை விரும்பவில்லை. அன்புடன் நேசித்த கணவனால் கைவிடப்பட்டு கவலைக்கடலில் மூழ்கித் தவிக்கும் ஹாரியட்டை கடன் தொல்லையும் கடுமையாகத் தாக்கியது. சாவை விரும்பி வரவேற்றாள். ஆனால் சாவு வரவில்லை. சாவை நோக்கித்தான் செல்ல விரும்பினாள். ஆனால் தான் பெற்றெடுத்த அன்பின் சின்னங்கள் அவள் வாழ்வை விரும்பி வேண்டி நின்றன!

பிப்ரவரித்திங்கள் 22ம் நாள் மேரியும் பிரசவித்தாள். எட்டுமாதத்தில் பிறந்த அக்குழந்தையும் மார்ச்சுத் திங்கள் 6ம்நாள் இறந்தது. 1815-ஜனவரி 5ஆம் நாள் ஷெல்லியின் பாட்டன் இறந்தார். ஷெல்லி தன் தந்தையுடன் ஒரு உடன்படிக்கைக்கு வந்தான் அதன் பேரில் ஷெல்லிக்கு ஆண்டொன்றுக்கு 800 பவுனும் ஹாரியட்டுக்கு 200 பவுனும் கிடைக்க

ஏற்பாடு செய்யப்பட்டது. 1815-ஆம் ஆண்டு ஜனவரி 24ல் மேரிக்கு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு வில்லியம் ஷெல்லி என்று பெயரிட்டார்கள்.

பிஷப்ஸ்கேட் என்ற இடத்தில் ஒரு வீட்டில் வசித்து வந்தார்கள். இக்காலத்தில் கடன்காரர்கள் தொல்லைகள் இல்லாமலும், உடல் நலத்துடனும் ஷெல்லி வாழ்ந்தான். அலாஸ்டர் என்ற நூல் எழுதி வெளியிட்டான். ஹாரியட்டும் குட்வினும் மாத்திரம் அடிக்கடி தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். குட்வினின் கடனைத் தீர்ப்பதில் ஷெல்லி பெரும் பங்கு எடுத்துக்கொண்டான். ஆனால் குட்வின் ஷெல்லியை அலட்சியம் செய்து வெறுப்புடன் இருந்தார். அலாஸ்டர் நூல் வெளியானதும் மதிப்புரைப் பகுதியில் கடுமையாகத் தாக்கி பத்திரிக்கைகள் எழுதின. இவற்றால் மனம் நொந்த ஷெல்லி 1816-ஆம் ஆண்டு மே திங்கள் 3 ஆம் நாள் இங்கிலாந்தை விட்டு வெளியேறி 15 ஆம் நாள் ஜெனிவா நகரையடைந்து அங்கு ஒரு விடுதியில் தங்கினார்கள். அவர்கள் அங்குச சென்ற பத்து நாட்கள் கழித்து பைரன் என்ற கவிஞனும் அதே விடுதியில் வந்து தங்கினான். பைரனும் ஷெல்லியும் அறிமுகமானார்கள். மாலைப்பொழுதின் பெரும் பகுதியை ஏரியில் உல்லாசமாகப் படகில் செல்வதின் மூலம் கழித்தார்கள். 'அறிவு அழகுப் பாசுரம்' என்ற கவிதையை வெளியிட்டான் ஷெல்லி.

மோன்பின் வெர்ட் என்ற இடத்தில் பிரயாணிகள் கையெழுத்து இடும் புத்தகத்தில் ஷெல்லி கீழ்கண்டவாறு எழுதினான்.

"ஷெல்லி, ஜனநாயகவாதி. மனித இனத்தினிடம் அன்பு கொண்டவன். நாத்திகன"

(Democrat, Great Lover of mankind and a theist)

இஃதே போல வேறு ஓரிடத்தில் ஷெல்லி எழுதிவைத்ததை பைரன் அதே இடத்திற்கு ஷெல்லிக்குப்பிறகு சென்ற பொழுது சுரண்டி எடுத்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

1816ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 29ம நாள் ஷெல்லி தன் குடும்பத்துடன் ஜெனிவாவை விட்டுக்கிளம்பி இங்கிலாந்து திரும்பினான். பாத் என்னுமிடத்தில் தன் மனைவி மேரி, குழந்தை வில்லியம் மைத்துனி கிளாயர் முதலியவர்களை விட்டுவிட்டு லண்டனுக்குச் சென்றான் ஷெல்லி. தன் குடும்ப சொத்து சம்பந்தமாக தந்தையுடன் செய்துகொள்ள வேண்டிய ஒப்பந்தம் காரணமாக தன் வக்கிலைக் கலந்து ஆலோசித்தான். அத்துடன் ஜெனிவாவிலிருந்து பைரன் அனுப்பிய கவிதை நூல் ஒன்றை வெளியிடுவது சம்பந்தமாக அச்சிடுபவரையும சந்தித்து ஆவன செய்தான். 1816-ல் அக்டோபர் திங்கள் 9ஆம் நாள் மேரியின் தங்கை பானி இம்லே பிரிஸ்டல் என்னும் நகரத்தில் ஒரு விடுதியில் விஷம் அருந்தி மாண்டாள். ஷெல்லியினிடத்தில் அன்புகொண்ட அவள் சாவு ஷெல்லிக்கு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. இந்தச் சமயத்தில் லேஹண்ட் என்பவரின் நட்பு கிடைத்தது. இவர் மூலம் சார்லஸ் லாம்ப், ஹாஸ்லிட், ரெய்னால்ட்ஸ் ஹோரேஸ் ஸ்மித், கீட்ஸ் இவர்கள் எல்லோரும் அறிமுகமானார்கள்.

ஷெல்லியால் கைவிடப்பட்ட ஹாரியட் கொஞ்சகாலம் தன் தந்தையுடன் வசித்தாள். தந்தையின் போக்கும் அவர்கள் அவளை நடத்தும் முறையும் வெறுப்பூட்டத்தக்கதாக இருந்தது. பிறந்த இடத்திலும் வெறுப்பை பெற்றாள். அன்பு கனிய பார்த்தவர்கள் வெறித்து வெறுப்புடன் நோக்கினார்கள். காதல் மொழி பேசி கைப்பிடித்த கணவன் கைவிட்டுவிட்டான். கையில் இரண்டு குழந்தைகள். வளமாகத் தென்பட்ட வாழ்க்கை வரண்ட பாலையாகக் காட்சியளித்தது. ஷெல்லி திரும்பி தன்னிடம் வருவான் என்ற நம்பிக்கை தேய்ந்து மாய்ந்து போயிற்று. அத்துடன் தான் வாழ வேண்டும் என்ற எண்ணமும் கனவாகக் கலைந்து கண்ணீரில் மறைந்தது. தான் தங்கியிருந்த தனி விடுதியிலிருந்து ஒருகாலத்தில் தன்னிடம் அன்பு பாராட்டி தனக்காக உற்றார் உறவினர் பெற்றோர் பெரும் சொத்து முதலியவைகளைத் துறந்து தன்னை மகிழ்வித்த மணாளன் ஷெல்லிக்கும் தன் நலமே அவள் நலமாகக்கொண்டு தாயின் பரிவைத் தன்னிடம் காட்டிய தன் தமக்கை எலிஸாவுக்கும் சேர்த்து ஒரு நீண்ட கடிதம் எழுதிவிட்டு நதியில் விழுந்து தன் உயிரை மாய்த்துக்கொண்டாள்.

தான் வெறுத்து ஒதுக்கிய தன் முதல் மனைவி ஹாரியட்டிற்கும் அவள் குழந்தைகளும் வாழ்க்கை நடத்த பணம் அனுப்புவதற்காக தன் வக்கிலின் மூலம் அவள் இருப்பிடம் தேடச்சொல்லியிருந்தான் ஷெல்லி. இருப்பிடம் தேடியலைந்த வழக்கறிஞர் கடைசியாக அவள் இறந்த இடத்தைப் பார்த்தான்! அந்தச் செய்தியை ஷெல்லிக்கு அறிவித்தார். ஷெல்லி இச்செய்தி கேட்டதும் லண்டனுக்கு விரைந்தான். எப்படியாவது தன் மகனைத் தன்னுடன் கொண்டுபோகவேண்டும் என்று

முயன்றான். அன்புப் பரிசாகத் தான் பெற்ற தன் முதற்செல்வத்தை தனதாக்கிக்கொள்ள ஷெல்லி முயன்றான. ஆனல் ஹாரியட்டின் அந்திய கால ஆசைப்படி எலிஸா இயான்த்தேயை ஷெல்லியுடன் அனுப்ப மறுத்துத் தன்னுடன் வைத்து வளர்த்து வந்தாள்.

ஹாரியட் இறந்தபிறகு ஷெல்லி குட்வினுடைய எண்ணத்திற் இணங்க டிசம்பர் திங்கள் 30-ம் நாள் மேரியை சட்டப்படி தேவாலயத்தில் மணந்துகொண்டான். இதன்பிறகு குட்வினுக்கும் ஷெல்லிக்கு மிடையேயிருந்த மனக்கசப்பு மாய்ந்து மகிழ்ச்சி பெருகியது.

1817-ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் 10-ஆம் நாள் ஹாரியட்டின் தந்தை குழந்தையை ஷெல்லியிடம்விட மறுத்தும் அவசியம் ஏற்பட்டால் நீதிமன்றமே காப்பாளர் ஒருவரை நியமிக்கலாம் என்றும் வழக்குத் தொடர்ந்தார். வழககில் ஷெல்லி ஒரு நாத்திகன். பரம்பரையாக வழக்கில் இருக்கும் பழக்கத்தையெல்லாம் பகைத்துக்கொண்டிருப்பவன், புரட்சிக்காரன் என்றும் குழந்தைகளை அவன் கண்காணிப்பில் விடுவது ஆபத்தானது என்றும் கண்டிருந்தது. இத்துடன் அக்காலத்தில் அதிகப்புகழுடனிருந்த சர், சாமுவேல் ரோமில்லி என்ற வழக்கறிஞரை ஹாரியட்டின் தந்தை வெஸ்ட்புரூக் அமர்த்தியிருந்தார். ஷெல்லியும் புகழ்பெற்ற வழக்கறிஞர்களான சார்லஸ் விதரல், பேசில் மாண்டேகு, பெல் ஆகிய மூவரையும் தனக்காக வாதாடும்படி செய்தார். நீதிபதியாக வந்தவரும் பேரும் புகழும் பெற்ற லார்டு எல்டன் என்பவர்.

ஜனவரித்திங்கள் 24-ஆம்நாள் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சர்.சாமுவேல் ரோமில்லி, ஷெல்லியின் 'க்வீன்மாப்' என்ற நூலை ஆதாரமாகக் கொண்டும், 'லார்டு எல்லன்பரோவுக்குத் தீட்டியகடிதம்' ஒன்றை ஆதாரமாகவும் சாட்சியாகவும் வைத்துக்கொண்டு மத சம்பந்தமான ஷெல்லியின் கருத்துக்களையும், மற்றும் திருமணம் போன்ற பழைய சம்பிரதாயங்களைத் தாக்கியும் தகர்த்தும் வரும் புரட்சிக் கருத்துக்களையுடைய ஷெல்லியினிடம் குழந்தைகளை வளரவிட்டால் இப்படிப்பட்ட பயங்கரமான கருத்துக்கள் குழந்தைகளையும் பாழாக்கிவிடும் என்றும் கூறினர். கொடிய தொத்து வியாதிபோன்ற புரட்சிக் கருத்துக்கள் குழந்தைகளையும் தொத்திக்கொள்ளும், அதைத் தடுப்பதற்காக, சின்னஞ்சிறு குழந்தைகளை அவற்றின் தந்தையான ஷெல்லியிடம் விட்டுவைக்கக் கூடாது என்று வாதாடினர். ஷெல்லியின் சார்பில் பேசில் மாண்டேகு 'க்வீன்மாப்' முதலிய நூல்களிளின் கண்ட கருத்துக்கள் ஷெல்லியால் அவரது இளம் வயதில் எழுதப்பட்டவை என்றும், மேலும் ஒரு குறிப்பிட்ட கருத்துக்களை எழுதுவதின் மூலம் அதே கருத்துக்களை ஷெல்லி தன் மக்களுக்குக் கற்பிக்க முயல்வார் என்று கருதுவது தவறு என்றும் வாதாடினர். ஷெல்லியின் சார்பில் வாதாடிய மற்றொரு வழக்கறிஞரான விதரல் சாட்சிக்குக் கொண்டுவரப்பட்ட ஏடுகள் அதிகம் அச்சிடப்படவில்லையென்றும், திருமண சம்பந்தமாகக்கொண்ட புதுமைக் கருத்துக்கள் பற்றி அதிகம் வாதிப்பது சரியல்ல; காரணம் ஷெல்லி இருபத்தைந்து வயதிற்குள் இருமுறை திருமணம் செய்துகொண்டவர் என்றும் கூறி, இறுதியில் மத சம்பந்தமான கருத்து வேறுபாடு காரணமாக இங்கிலாந்திலோ அன்றி வேறு எந்த நாட்டிலோ தந்தை தன் குழந்தைகளைப் பிரிந்திருக்கும்படியான தீர்ப்பு இதுவரை அளிக்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

வழக்கைக் கேட்ட நீதிபதி 'எல்டன்' வழக்கின் தீர்ப்பைத் தள்ளிவைத்தார். இதற்கிடையில் மதக்கருத்துக்கள் பற்றி வாதிட்ட எதிர்தரப்பினர் ஷெல்லியின் திருமணம் பற்றிய கருத்துக்களைத் தாக்கினர்கள். இதற்கு பதில் கூறும் வகையில் ஷெல்லி தன் வாதங்களைச் சொல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஷெல்லியின் பதிலைத் தயாரிப்பதில் அவனுக்கு லேஹண்டும் குட்வினும் உதவி புரிந்தனர். ஷெல்லி தன் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்திருந்தான். "மதக்கருத்துக்களை நான் தாக்கியிருந்தால் நான் தண்டனைக்கு உரியவனுக இருக்கலாம். ஆனல் என் குழந்தைகளைப் பிரிந்திருப்பதின் மூலம் நான் தாக்கியதாகச் சொல்லப்படும் கருத்துக்களுக்கு வலிவு தேட முடியாது. இங்கிலாந்து நாட்டுச் சட்டத்திற்குப் புறம்பானதாக சமூக வாழ்க்கை இருக்கிறது என்று நான் கற்பனை செய்திருந்தால் நான் தண்டனைக் குரியவனுக இருக்கலாம். அதற்காக என் குழந்தைகளை என்னிடமிருந்து பிரிப்பது அநீதி. புரட்சிகரமான அரசியல் கருத்துக்களையோ, புதுமையான சமூகக் கருத்துக்களையோ என் குழந்தைகளுக்குக் கற்பிக்கிறேன என்பதைக்காட்டிலும் அடக்கமற்ற, துடுக்கான நாணமில்லாத முறையில் நெறிதவறிய கல்வி கற்பிக்கிறேன என்பதை ஆராய்வது அவசியம். இச்சந்தர்ப்பத்தில் தற்பொழுது இங்கிலாந்தில் வழக்கிலிருக்கும் திருமணமுறை, தீங்கு விளைவிக்கும் கொடுமையான நிறுவனம் என்று கூறுவதால் இருக்க முடியாது. இந்தக் கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்வதினல் என் குழந்தைகள் என்னிடமிருந்து பிரிக்கப்படுமாகுல், இங்

கிலாந்தில்-ஏன் உலகில் எந்த நாட்டிலுமே-யாரும் வழக்கு மன்றத்தின் தலையீட்டிற்குப் பயந்து எந்தவித நடைமுறைக் கருத்துக்களையும் தாக்கிப் பேச முடியாமற் போய்விடும்.''

நீதிபதி ஷெல்லியினிடமோ அல்லது வெஸ்ட்புரூக்கினிடமோ குழந்தைகளை வளரவிட முடியாது என்றும் முடியுமானால் இருவரும் குறிப்பிடும் வேறு ஒருவரின் பாதுகாப்பின்கீழ் குழந்தைகள் வளரலாம் என்று கூறினார். அதன்படி ஷெல்லி குறிப்பிட்ட 'ஹியூம் என்பவரின் மேற்பார்வையின்கீழ் குழந்தைகள் விடப்பட்டன. ஷெல்லி முதன்முதலில் குழந்தைகளுக்கு கொடுத்த பணம் தவிர ஆண்டொனறுக்கு 80-பவுன் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன் மாதம் ஒருமுறை ஷெல்லி குழந்தைகளைப் பார்க்க அனுமதிக்கப்பட்டான். ஆனால் அந்தச்சமயத்தில் ஹியூமும் உடன் இருக்கவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. வெஸ்ட்புரூக், டிமோதி ஷெல்லி இவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் குழந்தைகளைப் பார்க்கலாம் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பு ஷெல்லியின் மனதை வாட்டியது! மாதம் ஒருமுறை கூட அல்ல எஞ்சிய நாள் முழுதும் ஷெல்தன் குழந்தைகளைப் பாக்க முடியாமற்போய் விட்டது!

1817-ஆம் ஆண்டு வழக்கு நடந்துகொண்டிருக்கும்பொழுதும் அதற்குப்பிறகும் ஷெல்லி தன் சொந்தவீட்டில் மார்லோ என்ற இடத்தில் வசித்தான். நாடோடியாகச் சுற்றித் திரிந்து விடுதியில் வாழ்ந்த ஷெல்லி தனக்கென வீடு ஒன்று வாங்கி அதில் குடியேறியதும் தன் நண்பர்களை அடிக்கடி விருந்திற்கழைத்து உபசரித்தான். இந்நேரத்தில்தான் 'இஸ்லாமின் கிளர்ச்சி' என்ற நூலை வெளியிட்டான். மார்லோ பகுதியில் வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் ஏழைகள் ஷெல்லி சனிக்கிழமை முழுவதும் ஏழைகளுக்குத் தன்னாலான பண உதவி செய்வதை முக்கிய வேலையாகக் கொண்டான். ஏனையநாட்களில் ஏழைகள் வசிக்கும் பகுதிகளுக்குச் சென்று அவர்களுடன் கலந்து உறவாடி அவர்கள் குறையைத் தீர்ப்பதில் தன் பணியைச் செய்தான். செப்டம்பர் இரண்டாம்நாள் மேரிக்கு மூன்றாவதாக பெண் குழந்தை ஒன்று பிறந்தது.

வழக்கில் தான் பெற்ற தோல்வி அதன் விளைவான அமைதியின்மை, பணத்தின் அருமை தெரியாமல் ஏழைகளுக்கும் குட்வினுக்கும் வாரி வழங்கி தானும் பொருளாதாரத் தொல்லையில் சிக்கிக்கொண்டதால் ஏற்பட்ட தொல்லை. இவற்றை மறந்து வாழ வசதியான இடம் தேடிக்கொண்டிருந்தான் ஷெல்லி. இதனால் மனம் உடைந்த ஷெல்லி தீராத நோய்க்கு ஆளானான். வைத்தியர்கள் குளிர் நிலத்தைவிட்டு சிறிது வெப்பம் தரும் ஐரோப்பாவுக்குச் செல்லும்படி ஷெல்லியிடம் வற்புறுத்தினார்கள்.

பிறந்த பொன்னாட்டை விட்டு கடைசி முறையாக வெளியேறினான் ஷெல்லி 1818ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் தன் குடும்பத்துடன் ஷெல்லி இத்தாலி நாட்டில் தங்குவதற்காகச் சென்றான. வெனிஸ் நகரில் பைரனைச் சந்தித்தான். வெனிஸ் நகருக்கு வந்த அன்றே ஷெல்லியின் மகள் கிளரா இறந்தாள். அதன பிறகு ஷெல்லி நேபிள்ஸ் நகருக்குச் சென்று கடலை ஒட்டியிருந்த ஒரு விடுதியில் தங்கினான். சுற்றுப்புரத்தில் இயற்கை காட்சிகள் அழகும் பொலிவும் பெற்றுத் திகழ்ந்தும் ஷெல்லியும் மேரியும் எங்கு சென்றாலும் தனிமை தங்களை வாட்டுவதை நினைத்து வருந்தினார்கள். குறிப்பாக மேரி சென்ற இடத்தில் எல்லாம் மக்களிடையே அன்பாகப் பழக முடியாமல் அந்நியராகவே கருதப்படுவதை நினைத்து மனம நொந்தாள். மகனை இழந்ததால் வந்த மனக்குறை. அடுத்த குழந்தைக்குத் தாயாகும் நிலையில் இருந்தாள். வைத்திய வசதி தேடி ரோம் நகருக்குச் சென்றார்கள். அங்கு ஷெல்லியின் அருமை மகன் வில்லிக்கு காய்ச்சல்கண்டு மூன்றுநாட்களில் இறந்தான்

தங்களிடம் அன்பு பாராட்டி ஆசையுடன் இருந்த மேரியின் தங்கை பானி விஷமருந்தி மாண்டாள். உற்றார் பெற்றோர் எல்லோரையும் துறந்து தான் காதல்கொண்டு கைப்பிடித்த காரிகை ஹாரியட் நதியில் மூழ்கி மறைந்தாள். இத்தாலியில் தன் அருமை மகள் கிளாரா மாண்டாள். ரோமில் அன்பு மகன் வில்லி இறந்தான். துன்பங்கள் தொடர்ந்து வந்தன! தொல்லைகள் தொடர் கதையாயின! எங்கும் எப்பொழுதும் தன்னைச் சுற்றி மரண ஓலம் கேட்பதை ஷெல்லி உணர்ந்தான். மேரி! பாவம்! தன் தங்கை தற்கொலை செய்துகொண்ட துயரம் தீருவதற்குள் மகளை இழந்தாள்! மனக்கவலை மறையு முன் மகனையும் இழந்தாள்! எப்பொழுதும் எந்நேரமும் தன் அருமை மகனின் சின்னஞ்சிறு கால்கள் கடற்கரைக் குறுமணலில் குதித்தோடி வரும காட்சியைக் கண்டு கண்ணீர் உகுத்தாள். பிளாரன்ஸ் நகரில் மேரிக்கு ஆண்

(இதன் தொடர்ச்சி 33-ஆம் பக்கம் பார்க்க)

வெற்றி யாருக்கு?

[அருணன்]

காட்சி—18

இடம்: வீரவர்மன் பாசறை.

உறுப்பினர்: வெற்றித்தோளன் வீரவர்மன் தர்மவர்-புனிதா.

நிகழ்ச்சி: வெற்றித்தோளன் போர் வெறியுடன் உட்கார்ந்திருக்கிறான். தொலைவில் அவன் தாய்வருவதைப் பார்க்கிறான். (எழுந்தோடி)

வெற்: அம்மா!

தர்: கண்ணே!

வெற்: புனிதா!

புனி: அன்பே!

வெற்: அம்மா! ஏனம்மா இவ்விதம் தனியே புறப்பட்டீர்கள். போர்தொடுத்துவிட்டேன் என்கின்ற காரணத்துக்காக அவர்கள் உங்களை நாடு கடத்தினார்களா! கொஞ்சமும் ஆராயாது பெண்களை வழிநடத்த இசைந்ததா அந்த இரக்கமற்றவர்களின் இதயங்கள்! குணபாலன் என்ன செத்துவிட்டானா? அல்லது அந்தப் பித்தம் பிடித்தவர் கூத்துக்கு மத்தளம் தட்டிக்கொண்டிருக்கிறானா? ஆகட்டும் இனித்துளியும் தாமதிக்கப்போவதில்லை. கொஞ்சம்பற்றாதிருந்த நெருப்பையும் பக்குவமாகப்பற்றவைத்துத் தூண்டி எரியவிட்டு விட்டார்கள். எத்தனை நொடியில் எரிகிறது கோரிநாடு என்பதைப்பாருங்கள்! பாருங்கள்!! பாருங்களம்மா பாருங்கள்.

தர்: ஆத்திரத்தால் ஆராயாது அனல் மொழிகளை அள்ளி வீசுகிறாய் அருமை மகனே! அவர்கள் என்னை நாடுகடத்தவுமில்லை. நானவ்விதம் நலிவு படுத்தப்படவுமில்லை. இருவரும் உன்னை நாடியே வந்திருக்கிறோம்; ஒருவேண்டுகோளுக்காக.

வெற்: வேண்டுகோளா? என்னிடமா? அம்மா என்னை வதைக்காமல் வதைக்கிறீர்கள் உங்கள் வாய்வார்த்தைகொண்டு. கட்டளை இடுங்கள் தாயே. காத்திருக்கிறேன் தாயே கட்டளையை மைந்தன் அரைக்கணத்தில் நிறைவேற்ற.

தர்: உண்மையாகவா!

வெற்: உண்மைதான் தாயே! தாய்க்குத் தனையன் பொய்கூறுவதா. புனிதா! ஏன் கலங்குகிறாய் இன்பமே! என்ன செய்யலாம். ஒன்றாய் இணைந்து வாழ வேண்டியநாம், ஒரு சிலரின் எண்ணங்களால் பிரித்து வைக்கப் பட்டிருக்கிறோம். என்றாலும், மானங் காத்து வாழத்தான் தன் மனையாட்டியையும் பிரிந்தான்; அவளும் உடன்பட்டு அவன் காப்புக்குத் துணை நின்றாள் என்ற பெருமை என்னுடன் உன்னையும் தானே சாரும். நீ வருந்தலாமா? போருக்குச் செல்லுகின்ற போதெல்லாம் புன்சிரிப்பை உடன் கூட்டிப் “போய் வாருங்களத்தான் என்று பொன்போன்ற மொழிகளை நறுந்தேனில் குழைத்தெனக்குத் தருவாயே அதிலே இதுவும் ஒரு கூறென்று நினைத்துக்கொள். பிரிவு அதிக நாளில்லை. இன்றோ நாளையோ இன்னும்சில நாட்களிலோ தீர்ந்து விடும். அதன பின்னர் பிரியாத கூட்டுறவு-பழைய இன்பம்-பண்பட்ட வாழ்க்கை முறை எல்லாமும் நம்மை இணைந்திருக்க நாடிவரும். அதுவரை நலமாக இரு என் கண்ணே! நானிருக்க நீ மட்டும் வருந்து வானேன். அம்மா! தாங்கள் அவளுக்கு ஆறுதலைக் கூறுங்கள்.

தர்: எத்தனைதான் ஆற்றும் மொழி கூறினாலும் மனைவிக்குக் கணவனைத்தவிர மகிழ்வேது மாற்றேது செல்வமே!

வெற்: எல்லாம் இன்னும் இரண்டு நாட்களில் சீராகி விடும். நாளைக் காலையிலே போர். நாளையே வெற்றி. நாளை மறுநாள்

நல்வாழ்வின் உதயம் கோரி நாட்டுக் கோட்டையிலே!

தர்: மகனே! அதற்காகத்தான் உன்னிடம் வேண்டுகிறேன்.

வெற்: இதற்கு வேண்டுகோள் எதற்காகத் தாயே! இங்கேயே வீற்றிருங்கள். வெற்றி ஒலியை இரு காதுகளும் குளிரக் கேட்டு இன்பம் பெறுங்கள்.

தர்: உண்மையாகவா சொல்லுகிறாய்!

வெற்: உறுதியாக: போர்! போர்! போர்! கோரிநாட்டின் மீது - சிறுமைக்குச் செவி கொடுத்துச் சிரம் தாழ்த்தவர்கள்மீது-மந்த மதி படைத்து மமதை கொண்டவர்கள்மீது போர்.

தர்: செல்வமே! வேண்டாமடா போர். வீணுகப் போர்தொடுத்து, வெறுங்கையர்களாக இருக்கும் அவர்களை வீழ்த்துவதால் நீ பெறப்போகும் பயன்!

வெற்: பழிக்குப் பழி தீர்த்துக் கொண்டேன் என்ற பரவசம்.

தர்: பழி! அவர்கள் என்ன பழி செய்தனர் உனக்கு! உன்னை நாடு கடத்தினர், அது தானே! சொந்தமதியால் செய்தனர் என்று சொல்ல முடியுமா உன்னால்!

வெற்: அயலார் மொழிக்குத் தன்மதியை அடகு வைத்த அவர்களுக்கு அழிவுதான் தகுதியான பரிசு. அறிவு கெட்டவர்கள் அழியவேண்டும். அதை இந்த அவனி அறியவேண்டும். அழிந்தொழிந்த கோரி நாடு புதிதாகும். அங்கே புத்தியற்றவர்களும் புல்லர்களும் இருக்கமாட்டார்கள். நன்றி கெட்டவர்கள் நாசமானபிறகு நல்லவர்கள் தோன்றுவர். கோழைகள் ஒழிந்தால் வீரர்கள் திரிவர் வீதியெல்லாம். அதைக் காண்பேன்; களிப்பேன், களிப்பிலே செழித்திருப்பேன். நான்மட்டுமல்ல நாமெல்லோரும்.

தர்: மகனே! நாடுகடத்திய குற்றத்திற்காக உன் தாய் நாடென்பதையும் மறந்து போர் தொடங்கி விட்டாயே! இது நன்றிகெட்ட தன்மையல்லவா? அவர்கள் உன்னை நாடு கடத்தினர்-நீ அவர்கள் உயிரையல்லவா அகற்ற உத்தேசிக்கிறாய்? இதுநேர்மையா? அவர்கள் தவறை உணர்த்தித் திருத்தலாம்-உன் எண்ணத்தின் பயன் அழிவின் உச்ச நிலையையல்லவா எட்டி நிற்கிறது?

வெற்: ஆம்! அழிவைத்தான் ஏற்படுத்தும். அவர்கள் அழியத்தான் வேண்டும்-அழியத்தான் போகிறார்கள். இனி அவர்கள் வாழ்வதில் பயனற்றவர்கள். நேர்மையறியாத அவர்களின் நிழல்பட்ட இடங்களுங்கூட நேர்மை நீங்கியிருக்கும். ஆகவே அவர்களுக்கு நான் செய்துள்ள முடிவே முடிவு.

தர்: உன்முடிவை மாற்றமாட்டாய்?

வெற்: மாட்டேன்,

தர்: ஆயின் உன்தாயின் முடிவை இங்கே காண்பாய்.

வெற்: அம்மா!

தர்: ஏன்? ஏன் களங்குகிறாய். என்னைப் போன்ற எத்தனையோ தாய்மார்களை வெட்டி வீழ்த்தப் புறப்பட்டிருக்கும் நீ என் வீழ்ச்சிக்காக ஏன் கலங்குகிறாய்? நீ அமைத்துள்ள போர்க்களத்திற்குக் கால்கோளாக உன் தாயைக் கொன்றுவிடு. தாயையே கொன்று தன்மான எண்ணத்தை நிறைவேற்றிய வீரனென்று உன்னை உலகம் புகழும்.

வெற்: இப்போது நீங்கள் வாதிட வந்திருக்கிறீர்களே அந்த நாட்டினர், நீங்கள் கண் கலங்கிக் கண்ணீர் சிந்தியபோது கல்லாயிருந்தனரே! அருமை மனைவி அலறிய போது சற்றும் அசையாதிருந்ததே அவர்கள் கல்நெஞ்சம்.

தர்: அதைப்பற்றிச் சிந்திக்கவேண்டியவர்கள் நாங்கள். அவர்களை நான் மன்னித்துவிடுகிறேன். உன்னை அவர்கள் வரவேற்கிறார்கள். அதற்காகவே உனக்கு அழைப்புக் கொண்டு வந்திருக்கிறேன்.

வெற்: அம்மா!

தர்: புறப்படு என்னுடன்.

வெற்: அம்மா! ஒருபோதும் உடன்பட மாட்டேன். உங்கள் உள்ளம் இரங்கலாம்-என் உள்ளம் மாறாது. பலகோழைகள் நடுவிலிருக்கும் வீரனும் கோழையாவானென்பது உண்மையாய் விட்டது. மகனின் பிரிவுக்கு மயங்கி மட்டரகமான எண்ணத்தைக் கொண்டுவிட்டீர்கள். என்றேனும் சாக வேண்டியவன் இப்போது - மானத்தோடு செத்தானென்று எண்ணி இருக்கவேண்டிய தாங்கள், என்னையும் மானங்கெடச்செய்யத் துணிந்திருப்பதைக்கண்டு வெட்கப்படுகிறேன் தாயே! எப்படித் தோன்றியது உங்

களுக்கு இந்தமதி! அன்று 'வெளியேபோ' என்று வீராவேசத்துடன் பேசிய நாக்கு இப்போது வெறுஞ் சொற்களை வீசுவது ஏன்.

தர்: நான் சொல்லுவதைக்கேள்!

வெற்: இன்னும் அதைப்போன்ற சொற்களைத் தொடர்ந்து பேசாதீர்களம்மா.

தர்: என் சொற்களைக் கேட்கமாட்டாய்.

வெற்: ஒருபோதும் முடியாது! அய்யய்யோ! நினைத்தாலே நெஞ்சுபதைக்கிறது. ஒருதாய்-வீரத்தாய்-என்னதான் பாசமாயிருந்தாலும் மகனின் மானங் கெடுவதைக் கண்டு சம்மதித்து ஏற்பார்களா? அம்மா! வேண்டுமானால் நான் அந்த நாட்டிற்காகப் போர் செய்வதில்லை. (உடைவாளைக் கழற்றி வீசுகிறான்) ஆனால், அங்கே நான் இந்நிலையில் திரும்ப வரமாட்டேன் போங்கள்-போய் விடுங்கள்.

தர்: இதுதான் உன்முடிவா?

வெற்: ஆம்! செல்லுங்கள். சென்று சொல்லுங்கள் உங்கள் நாட்டவரிடம்! "வெற்றித்தோளன்கோரிநாட்டிற்காக வாளேந்தி, எதிர்த்தோ துணையாகவோ போர் செய்யமாட்டான்" என்று சொல்லுங்கள். போங்கள் புனிதா! உன் பொன்னுட்டிற்குப்போ! வன்நெஞ்சக்காரர்கள் வாழும் நாட்டிற்கு உன்னை வழியனுப்புகிறேன்போ! இனி உறுதியாக-உயிர் ஒன்றாகக்கலந்து மகிழ்வோம்-போ-போ!

புனி: அத்தான். வேண்டாம் அத்தான். நான் இங்கேயே தங்கிவிடுகிறேன். உங்கள் இருப்பிடம் தானே எனக்குத் தங்கும் இடம். உங்கள் சேவையிலே தானே எனக்கு மகிழ்ச்சி. உங்கள் பார்வைதானே எனக்கு உயிர்-உறைவிடம்-உணவு. உயிரற்று ஊசலாடுவதை மாற்றி உள்ளத்தில் இடங்கொடுத்த நீங்கள் உங்களோடிருக்க அனுமதிக்கமாட்டீர்களா?

வெற்: இல்லை, அன்பே! நீபோ-போவதுதான் முறை. எப்படியும் போர் ஒரு முடிவு தரும்! போய் வாருங்கள் தாயே! மீண்டும் ஒரு முறை நான் தங்களைக்காண நேருமானால் அப்போது என்னிடம் பாசஉணர்ச்சி எஞ்சியிருக்குமென்ற நம்பிக்கையில்லை எனக்கு! தங்கள் உள்ளத்தை நன்றாய் அறிந்தவன் நான். அதிலும் தங்கள் உதிரத்தின் வளத்தால்செழித்ததென்உள்ளம். போரிலே தாங்களும் கலந்துகொள்வீர்களென்றே எதிர்பார்க்கிறேன். வான் மழையை வரையிட்டுப் பெறமுடியாததைப் போன்றது வெற்றி! அதையாருக்கென்று நிர்ணயிக்க முடியாததும் அதைப்போன்றதே தான். ஆதலின் என் இறுதி வணக்கத்தை ஏற்றுச் செல்லுங்கள்.

(கால்களில் வீழ்ந்து கட்டித் தழுவியவாறு)

அம்மா! உங்கள் அருமை மகனுக்குத் தாங்கள் மானத்தைத் தாய்ப்பாலுடன் கலந்து ஊட்டிவிட்ட காரணத்தால் அவன்மேன்மை நிலவுகிறது. அதைக் காத்துக்கொள்ளத் தாய்சொல்லைத் தாண்டி விட்டேனென்று பழிக்கத்தக்க நிலைக்கு நான் ஏகிவிட்டாலும் கவலையில்லை. விடைபெற்றுக் கொள்ளுகிறேன் தாயே! வெற்றியை விதவிதமாகப் பெற்றுப் பூரித்த நாட்டிலே வீணர்களாம் பூணர்கள்; வெற்றுமனிதர்கள்; வெற்றியைக் கண்டு விட்டார்கள். போய் வாருங்கள் தாயே-போங்கள்!

(போகின்றனர். தனிமையில் வந்து அமருகிறான். வீரவர்மன் பின்புறமிருந்து வந்து)

வீர: (தனக்குள்) (இவ்விதமாற்றம் வெற்றித்தோளனை இன்னும் மாற்றிக் கோரி நாட்டிற்கு எடுத்துச் சென்று விட்டால்-பின்னர் நம்முயற்சிகள் எதுவும் பலிக்காது. இதுதான் தருணம். இவன் அழிய வேண்டியதுதான். வீரனே! உன் முன்னே நான் ஒரு கோழை. இதோ! ஆ! (திகைப்புடன்) குத்துவது.

வெற்றித்தோளரே!

(அழைக்கிறான். ஒலி கேட்டுத் திரும்புகிறான். உடனே வீரவர்மனின் வாள் வெற்றித்தோளன் மார்பில் பாய்கிறது. வெற்றித்தோளன் சிரித்துக்கொண்டே வணக்கம்-மகிழ்ச்சி-வெற்றி உனக்குத்தான்! வாழ்க! (என்று சொல்லியவாறு இறந்துவிடுகிறான்)

வீர: வெற்றியாருக்கு? எனக்கல்ல வீரர் திலகமே! உனக்குத்தான். உன்னை வெல்ல முடியாது என்பதாலேயே கொன்றேன். ஆகவே வென்றவன் நீ! மாசற்ற உன்நேசம், கலக்கமற்ற, உன் நெஞ்சம் கபடமில்லாத உன் தன்மை இவைகளை இனி என்று காணப்போகிறேன்! அசையாது கிடக்கிறாய் நீ. என்னை அலைக்கழிக்கிறதே உம் தோற்றம்! பிணத்திலும் வீரம்! வெற்றித்

திருமகனே! உமது நட்பின் அறிகுறியாக நாட்டிடையே பரவியுள்ள மடமையை மாய்ப்பேன்! அறிவைப் பரப்புவேன்! நாட்டினரைக் குடித்தலைவர்களாய் வாழவைப்பேன். இதோ புறப்படுகிறேன்.

(வெற்றித் தோளனைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு கோரிநாடு நோக்கி நடக்கிறான்)

காட்சி—19

இடம்: கோரிநாடு.

உறுப்பினர்: நாட்டுப் பெருமக்கள்.

நிகழ்ச்சி: வெற்றித்தோளனின் பந்திப் புக்குச் சென்றவர்களை எதிர்பார்த்து இருக்கின்றனர். சற்று பொறுத்து.

பெரி 1: அதோ வந்துவிட்டனர்.

பெரி 2: அவர்கள் வருவதைப் பார்த்தால் வெற்றியுடன் திரும்புவதாகவே தெரிகிறது

3-மூவர் மட்டுந்தானே வருகின்றனர்.

1-வெற்றித்தோளன் ஒருவேளை பின்தங்கி வந்தாலும் வரக்கூடும்.

2-எப்படியோ அவன் நாட்டிற்குள் வந்து சேர்ந்தால் போதும்.

3-ஆம்-நாட்டிற்கு அவர் வருவாரா என்கின்ற நிலைக்கு அவரை ஆளாக்கிவிட்டோமே! உண்மையில் மதியிழந்துதான்போனோம்.

1-அதன் மூலம் ஒருநாட்டு வீரனின் உயர்வை உணர்ந்து கொண்டோம்.

(மூவரும் வருகின்றனர். பெருமக்கள் எழுந்து சென்று).

மூவரும்: வாருங்கள்—வாருங்கள்—சென்ற காரியம் வெற்றிதானே.

1-தர்மவதி அம்மையார் சென்றிருந்தும் தோல்வியுடனு திரும்புவார்கள்.

2-வெற்றித்தோளரெங்கே.

3-அவர் வரவில்லையா? குணசீலரே!

தர்: வரமாட்டான்-என்கண்மணி. இந்த நாட்டு மண்ணில் மிதிக்க மாட்டான்.

1-என்ன! வரமறுத்துவிட்டாரா-நாட்டையே மறந்து விட்டாரா—நாட்டின் நல்வாழ்வைப் பற்றிய எண்ணம் அகன்று விட்டதா.

தர்: வரமறுக்கவில்லை! வரநினைத்த அவன் ஆசையை உங்கள் வாய்ச்சொல் வழி மறைத்துவிட்டது! நாட்டை மறக்கவில்லை அவன். நாடுகடத்திய செயலைத்தான் அவனால் முடியவில்லை. ஆனால் நாட்டின் நல்வாழ்வைப்பற்றிய எண்ணம் அகற்றப்பட்டு விட்டது-அன்பும் ஆர்வமும் துன்பமும் கோபமுமாக மாற்றப்பட்டுவிட்டது உங்கள் செயலால். என் கண்மணியிடம் அவன் கண்ணியத்தை இழக்கவேண்டுமென்று அதற்குமேல் கட்டாயப் படுத்த என்னால் முடியவில்லை.

1-புனிதா: நீயாவது சொல்லியிருக்கக் கூடாதா!

புனி: எத்தனைதான் சொன்னாலும் அத்தனைக்கும் மேலாக அவர் மானத்தைஇழக்க வேண்டுமென்று நான் சொல்ல முடியுமா? சகிக்க முடியாத வேதனையை விலைபொருளாகக் கொண்டு வீற்றிருக்கும் அவரைப் பார்த்துத் திரும்பியதே அந்த வேதனையையும் தனிமையில் அனுபவிக்க விரும்பும் அவா ஆசையைப் பூர்த்து செய்யததான. அவர் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமானால் அவர் முன் நில்லாது வந்துவிடுவதுதான்.

உ: குணபாலரே-நீராவது—

குண: அவரைக் காணவேண்டுமென்ற ஆசை கூட முழுதும் நிறைவேராது எட்ட நின்று பார்த்து வந்தான்.

3-ஏன்? நீர் உடன் போகவில்லையா?

குண: போயிருந்தால் இந்த இரண்டொரு வார்த்தைகள் கூடக் கேட்டிருக்காது இவர்கள் செவியில். 'குணபாலா ஏன் வந்தாய் இவர்களுடன்' என்பார்—என்ன பதில் கூறுவேன் நான்.

1-அப்படியானல்-போரிலே நாடு அழிவது தான் நிச்சயமா?

தர்: அதுவும் இனி அவனால் ஏற்படாது.

1-ஆ!

தர்: ஆம்-இந்த நாட்டிற்குத் துணையாகவோ எதிராகவோ வாள்தாங்க மாட்டேனென்று உறுதி சொல்லி எங்களை அனுப்பிவிட்டான்.

2-அழிவு வெகு சமீபத்திலிருக்கிறது.

3-ஏனப்படிக் கூறுகிறீர்கள்.

2-வீரவர்மன் கண்கள் கோரி நாட்டின்மீது நெடுநாளாகவே இருந்து வருகிறது. வெற்றித் தோளரின் உறுதிமொழி அவன் உள்ளத்துக்கு உரம் ஊட்டும். துணிந்து போர் தொடுப்பான் — வெற்றியும் பெறுவான். வீழ்ந்தது நம் மகிழ்வு-சாய்ந்தது நம் வாழ்வு-சரிந்தது நம் இன்பக்கோட்டைகள்-வெற்றி வீரவர்மனுக்கு.

(ஒரு ஆள் வருவதைக் கவனிக்கிருர்கள்) அதோ—அதோ வீரவர்மன். தனிமையில் வருகிருன்-

1-படை தொடர்ந்து வரும்.

3.ஒருவேளை சமாதானமுறையில் வருகிருனோ-

2-புலியிடம் பொறுமை இருக்குமா? நெருப்பிலே நீர் சுரக்குமா? வில்லிலிருந்து விடுபட்ட அம்பு வேதாந்தம் படிக்குமா? நாட்டாசை கொண்ட வீரவர்மன் சமாதானத்திற்கு ஏன் வரப்போகிருன்?

1-அவன் தோள்மீது-

2-புதுவித ஆயுதத்தைப் போர்த்திக்கொண்டு வருவான்-

3-வெற்றிகொண்ட எண்ணத்தில் வேகநடை-

(தூரத்திலேயே)

வீர: வெற்றி—வெற்றி—வெற்றி—யாருக்கு? (பிணத்தைக் கீழே வைக்கிருன்)

புனி: (திடுக்கிட்டு) அத்தான்! (அப்படியே சாய்ந்து விழுகிருள்.)

தர்: ஆ! ஐயோ! என் அருமைச் செல்வமே உன்னை நான் இந்தக் கோலத்திலும் காண வேண்டுமா? வீரத்தின் சின்னமாக வளர்ந்த உன்னை வீதியிலே பிணமாகக் காணவாடா விட்டுவைத்தேன். தந்தையின் புகழ் தாங்கித் தனிப் பெருமையடைவாய் என்று தவித்திருந்தேனடா! என் எண்ணத்தை மண்ணிலே பிரட்டிக் காட்டிவிட்டாயே! ஏ! நாடே இனியும் ஒருநல்ல வீரனைப் பெருதே-என்போன்ற தாய்மார்களே! உங்கள் குழந்தைகளை வீரமூட்டி வளர்க்காதீர்கள்.

(பெருமக்களைப் பார்த்து)

பாருங்கள். கண்களைத்திறந்து காணுங்கள்-உங்கள் கண்மூடித்தனம் தந்த பரிசு தரையிலே கிடப்பதைக் காணுங்கள்.

மகனே! நான் வந்திராவிட்டால் நீ உயிர் நீங்கியிருக்க மாட்டாயடா! பெற்ற மகனைத் தாயே மடித்தேனடா! என்னை மன்னித்து விடு.

(புனிதாவைப் பார்த்து)

புனிதா-புனிதா-அய்யோ! நீயும் போய்விட்டாயா? வீரனைப் பிரித்த நாட்டில் நீ ஏன் இருக்க வேண்டும். அன்பரைப் பிரிந்து அரைக் கணமும் வாழ விரும்பாத உன் அன்பே சிறந்தது. நான்மட்டும் ஏன் உயிருடன் இருக்கவேண்டும்—நானும் வருகிறேன்-

(பெருமக்களைப் பார்த்து)

வெற்றி கண்டுவிட்டீர்கள். அந்த மகிழ்ச்சியிலே பூரித்திருங்கள்.

மூவ: வெற்றிகண்டவன் வீரவர்மன்.

வீர: பேசாதீர்கள் உங்களுக்கு பேசவும் வகை இருக்கிறதா! வெற்றி என்ற வார்த்தையைச் சொல்லவும் நீங்கள் தகுதியற்றவர்கள். இதோ இருக்கிருர் (பிணமாய் விட்ட வெற்றித் தோளரின் உடலைச் சுட்டிக்காட்டி) வெற்றி கொண்டவர்! அவரின் வீரம் உங்களுக்கு வெற்றியை மட்டுமல்ல உயிரையும் வழங்குகிறது.

(தர்மவதியைப் பார்த்து)

தாயே-நாட்டின் நல்வாழ்வைக் காண விரும்பினுர் வெற்றித் தோளர். அவர் விரும்பியதைப் பெற இயலாது வேதனையையே கைக் கொண்டு அவர் வாழ்வதைக் காண விரும்பாத நான் அவரைக் கொன்றேன்.

எல்: ஆ-

வீர: ஏன்! ஏன் ஆச்சரியப் படுகிறீர்கள். அவரைத் தனியிருத்தி நான் படையெடுப்பதா? படையெடுத்து வெற்றியை நான் பெற்றுலும் இந்த நாடு அவருக்கு வேம்பாய் விட்டது. இந்த நிலையில் அவர் துடிப்பதைக் காண யார்தான் பொறுப்பார். ஆகவேகொன்றேன்! இதோ அவர்உடம்பை இந்த மண்ணிலேயே போட்டுவிட்டேன். அவரது பிறப்பிடம்-விளையாட்டு விடுதி-இன்பப் பூந்தோட்டம்-இந்த நாடு. இடைக்காலத்தில் ஏற்பட்ட மதியீனம் அத்தனையும் அற்றதாக்கியது அவரை. இதோ இன்று உயிர் நீங்கிய உடல் தாங்கி நிற்கிறது வீரம் தவழ்ந்த வெற்றுத்தரை.

1-போதும்-போதும் எங்கள் செயல் எங்களையே புண்ணக்குகிறது இனியும் புண்படுத்தாதீர். உமது வெற்றிக்குப் பாராட்டுகிருேம்!

வீர: வெற்றி அது இந்த நாட்டைப்பொருத் தவரையில் இனி யாருக்குமில்லை. உங்கள் மடமைவென்றது! உங்களை அதற்குப் பணித்த பூணர்களின் சூழ்ச்சி வென்றது அவர்கள் வரையில்-

உ-நாட்டிலே விருப்பங் கொண்ட உமது எண் ணம் வென்றது.......

வீர: வெற்றித்தோளரின் உயிர்த் தியாகத் தால். அவர் உள்ளம் வென்றது அனைவரை யும். வெற்றித் தாயார் தர்மவதி அம்மாள் கண்டுகளிக்க வெற்றித்தோளரின் ஆசை நிறைவேற-உங்கள் மகிழ்வு தளைக்க உங்க ளிடையே தனியாட்சி கண்டு மகிழ்வேன்.

(குணபாலனைப் பார்த்து)

குணமே உருவான குணபாலா-உன்னை இந்த நாடு மன்னனாகப் பெறுகிறது. உன் மீட்சியிலே தொடங்கிய கோரிநாட்டின் புது வரலாறு, அந்த நாட்டின் வெற்றிச் சின்ன மாக உன்னைப் பெற்றது. முதலில் இந்த மணச் சடங்கை நிறைவேற்றுவோம்.

குண: (வெற்றித்தோளனின் பக்கம் சென்று மண்டியிட்டு) எங்கள் வழிகாட்டியாக வந்த பெருந்தகையே! உமதுவிருப்பம் நிறைவேறு மாறு நான் செயலாற்ற உமது ஊக்கத்தை எனக்கு வகுத்துத் தருவீராக. உம்முடனே உறைந்திருந்தேன் - உறவாடினேன் - உரை யாடி உள்ளம் மகிழ்ந்தேன். அவையெல் லாம் என்றோ நிகழ்ந்தவைகளாக, நான் இனிக் கனவிலுங் கருதக் கூடாதவைகளாக மாறி விட்டதே! மாசற்றவரே! மற்றவர் தம் வாழ்வில் கருத்துக்கொண்டவரே! எங் கள் காவலரே! உமது பிரிவால் ஏற்பட்டு விட்ட இந்த அவல நிலை எங்களுக்குக் கற் பித்த நல்ல பாடம் எம் இதயத்தை விட்டு என்றென்றும் மாறாதிருக்குமாக!

(தர்மவதி அம்மையாரின் பக்கம் திரும்பி)

தாயே! ஒரு நல்மகனை ஈன்றீர்கள். அதன் பயனாய் இன்று உங்கள் மக்களென்ன எங் களில் பலருக்குத் தாயாய் விட்டீர்கள். தங் கள் பிரிவாற்றாமையை நிறைவுசெய்ய எங் களால் இயலாது. என்றாலும், எங்கள் வளர்ச்சியின் பொருட்டு இந்நாட்டின் தாயா கத்தாங்கள் நிலவியிருந்து, கடமை வழுவாத வாறு காத்து எங்களை வளர்க்க வேண்டு மம்மா!

தர்: குணபாலா! குணக்குன்றாக-குறையாத நிறைவுடனே என்றென்றும் யார்யார்க்கும் இதம் செய்பவனாக இருந்து, பதவி வந்த தென்ற காரணத்தால் பழமை மறவாது, குடிகளின் நலமே 'நாட்டமாய்க் கொண்டு நல்லன பலவும் பெற்று வாழ்ந்திரு!

வீர: என்னையும் தங்கள் மைந்தனாகவே கருதி வாழ்த்த வேண்டுகிறேன் தாயே! இன்று முதல் இதுவே என்நாடு-என் தாய் வீடு. இங் கேயே இருப்பேன். கண்ணை இமைகாப்பது போலக் காத்திருப்பேன் என் நாட்டை!

தர்: வீரவர்மா! வீரத்தின் உச்சநிலையை யெய்தியுள்ள உன் உள்ளப் பாங்குபோல் ஒவ்வொரு வீரரிதயங்களும் உரியதை உரி யவாறு உரியகாலத்தில் ஏற்றுக்கொள்ளு மானால் இன்னும் இன்பமாகுமப்பா! உன் ஒப்பற்ற நாட்டுப்பற்றை நான்மட்டுமல்ல இந்த நானிலமனைத்துமே வாழ்த்தக் கடமை பட்டிருக்கிறது. என்றென்றும் குன்றாப் போராண்மையும் - குறையா மனவளனும் பெற்று இனிது வாழ்ந்திரு. இந்நாடும் இனி உன் நாடே.

வீர: நான் பெற்றபேறுகளில் பெரும் பேறு வேறு எதுவுமில்லை தாயே! தங்களாணையை என் தலையாக ஏற்றுக் காப்பேனம்மா!

(ஏனையோரை நோக்கி)

இந்த நாட்டின்-என் நாட்டின் பெருங்குடி களே! சில நாட்களுக்கு முன்னர் வெற்றி யாருக்கு என்ற கேள்வி கேட்கப்பட்டது. அதன் பதில் இன்று கிடைத்துவிட்டது. இவ்வெற்றி ஓரளவில் கோரி நாட்டின் வெற்றியேயானாலும், வேறு வகையில் வெற் றிக்கைகொண்டுசென்றவர்களும் வாழுகிறார் கள். அவர்கள், எவ்வாறாயினும் தாங்கள் இந்த நிலையை அடைந்ததுதான். அவரை நான் அஞ்சியோ, நாட்டாசையாலோ இவ் வாறு செய்யவில்லையென்பதை என் நெஞ்சே அறியும்! அவர் வாழ்வு இனி அமைதி பெறுதென்பதாலும், அத்தகைய தொரு அமைதியை அவருக்கு ஏற்படுத்த இயலாதென்பதாலுமே இவ்வாறு செய் தேன். எனவே அவரே வெற்றிபெற்றார்! இனி வெற்றியெனச் சொல்லப்படும் சொல் லின் இலக்கணமும் பொருளும் அவரே! வெற்றி அவருக்கேயாகும். எனவே இறந் தும் இறவாப்புகழ் மேவிய வெற்றித்தோள ரின் புகழ்பாடி, தன்மை எண்ணி பெருமை கைக்கொண்டு, வீரம்போற்றி வெற்றியே நாம் நாமே வெற்றியென இரண்டற்று வாழ் வோமாக.

வாழ்க நாடு-வளம்பெற்று.

(எல்லோரும் இனிதிருந்தனர்)

முற்றுப்பெற்றது.

எதிர்பாராதது

(வளவன்)

எதிர்பாராதது என வாழ்க்கையில் பல நடக்கின்றன. எதிர்பாராதது என்று கூறும்பொழுது, அவற்றின்மேல் ஒன்றும் தவறில்லை, யாருக்கு அவை நிகழ்கின்றனவோ அவர்கள் சிலவற்றை எதிர்பார்க்கின்றனர், சிலவற்றை எதிர்பார்ப்பதில்லை. அவர்கள் முன்கூட்டி நினைத்துப் பார்க்காதிருந்தால், அதை எதிர்பாராதது என அழைத்துவிடுகின்றனர். எல்லாவற்றையும் முன்கூட்டி எதிர்பார்க்கமுடியாது. எனவே எதிர்பாராதவை நிகழ்கின்றன.

அன்று மாலை காரை எடுத்துக்கொண்டு வாசு கிளம்பியபொழுது எதிர்பாராததுஒன்று நிகழப்போகிறது என்று கண்டானா? வாசுதேவன்-வாசுவின் முழுப்பெயர்-வக்கில் பழனியப்பனின் மகன். தந்தை பிரபலமான வக்கில், அவருடைய பெரிய வீடும், அழகான தோட்டமும் அவருடைய வாழ்க்கைத் தரத்தை எடுத்துக்காட்டின. வாசுவும் பெரிய வக்கிலாக வேண்டும், என்று வீட்டார்-தாயும் தந்தையும் செய்த முடிவை வாசு ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. பி. ஏ. பட்டம் பெற்று முடிந்ததும், சட்டக்கல்லூரியில் நான்கு ஆண்டுகள் வாதாடிக் கொண்டிருந்தான். ஒருவாறாகக் கடைசிப் பரிட்சையையும் எழுதிவிட்டான். "அப்பாடா! பரிட்சையென்றால், ஏதோ கண்கட்டு வித்தை மாதிரி, நமக்குத் தெரியாததையும் புரியாததையும் கேட்பதில் வாத்தியார்கள் தங்கள் திறமையைக் காட்டிவிடுகிறார்கள்" என்று முதல் நாள் பரிட்சை முடிந்ததும் வாசு முணுமுணுத்துக்கொண்டான். ஆனால் அவன் தந்தை கேட்டபொழுது "ஒரு கேள்விக்குமட்டும் சரியாகப் பதில் எழுதவில்லை. மற்ற கேள்விகளெல்லாம் நன்றாகச் செய்திருக்கிறேன்!" என்று சமாளித்துக்கொண்டான். வாசு கெட்டிக்காரன்தான், ஆனால் ஒழுங்காகப் படித்ததில்லை. அவன் அம்மா கொடுத்த செல்லத்தில், கல்லூரிப் படிப்பைவிட சென்னையிலிருந்த "கண்காட்சிகள்" அவன் நேரத்தை ஈர்த்துக்கொண்டன. சினிமா, நாடகம், இசைக் கச்சேரி, கடற்கரை இப்படி ஒன்றில்லாவிட்டால் மற்றொன்று அவனுக்குச் சரியாக இருந்தது. அவனேகூடப் பாடுவான், நாடகங்களில் நடிப்பான், மணிக்கணக்கில் புத்தகத்தைத் திறந்துவைத்து, கண்ணை மூடி, கலைவுலகில் சுற்றித் திரிவான். மனமலர்ச்சோலையில் மகிழ்ச்சித் தென்றல் வீசும் பருவம் அது! வாழ்க்கை சோம்பேறித்தனம்நிறைந்த சுகமாக இருந்தது. அதில் சுறுசுறுப்பாகக் கவனிக்க வேண்டியதொன்றும் இல்லாதிருந்தது.

கடற்கரை ஓரத்துச் சாலையில் கார் போய்க்கொண்டிருக்கும் பொழுதுகூட, வாசுவின் உதடுகள் ஏதோ ஒரு பாட்டை அசைத்துக்கொண்டிருந்தன. சற்று மெய்மறந்து, சுற்றிலுமிருப்பதைக் கவனிக்காமல் அவன் போய்க்கொண்டிருந்தான். விளக்குகள் ஒவ்வொன்றாக நகர்ந்துகொண்டிருந்தன. வீசிய காற்று, அவன் நெற்றியில் சுருண்ட மயிரை அசைத்துக்கொண்டிருந்தது. "எங்கு போகலாம்?" என வாசு யோசித்தான். என்றைக்காவது ஒருநாள்தான் அப்பாவின் கார் கிடைக்கும். அன்றைக்குக் காரை எடுத்துக்கொண்டு கடற்கரையை சுற்றிக்கொண்டு, நண்பர்களையெல்லாம் பார்த்துவிட்டுத் திரும்பிவிடுவான். அப்பா வைத்திருந்த சிறிய கார்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. தன் "காலத்தில்" பெரிய கார் வாங்கிவிடவேண்டும் என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

திடீரென அவன் நினைவில் தடுமாற்றம். எதிரே ஏதோ ஒன்று அசைந்து வந்தது. காரை வேகமாக ஒடித்து, பிரேக்கைப் போட்டான். யாரோ தடுக்கி விழுந்துவிட்டார்கள்! அடிபட்டுவிட்டது! காரில் இருந்தபடியே அதை உணரமுடிந்தது. அவன் கீழே இறங்கி வருவதற்குள், கூட்டம் கூடிவிட்டது. அடிபட்டுக் கிடந்தது ஒரு பெண்! தலையிலும், கையிலும் காயம். "எப்படி வந்தது?" "என்

வேகமாக வந்தாய்?" "பார்த்துப் போக வேண்டும்" "ஒடித்திருக்காவிட்டால், இந்நேரம் பெண் பிணம் தான்" சுற்றிலும் கூடியவர்கள் பேசிக்கொண்டார்கள். அவர்களுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்க நேரமில்லை. "பிடியுங்கள். டாக்டரிடம் காட்டவேண்டும்!" என அடிப்பட்டவரைத் தூக்கிக் காரில் போட்டுக்கொண்டு கிளம்பினான். டாக்டர் என்றதும், தனது வீட்டுக்குப் பக்கத்திலிருந்த டாக்டர் பொன்னையா ஞாபகம் தான் வந்தது.

"என்ன நடந்தது?" என்று டாக்டர் பொன்னையா கேட்டார். "காரில் அடிபட்டு விட்டது" வாசுவால் சரியாகக்கூடச் சொல்ல முடியவில்லை. நாக்குத் தடுமாறியது. உடம்பு நடுங்கியது. இதுவரை அவன் கார் ஓட்டியதில், விபத்து ஒன்றும் நேர்ந்ததில்லை! அப்பா என்ன சொல்லித் திட்டப் போகிறாரோ? அப்பா திட்டுவதாவது ஒருபுறம் இருக்கட்டும். விபத்து எப்படிப்பட்டது? அடிபட்டவர்கள் எப்படியிருக்கிறார்கள்? உயிருக்கு ஆபத்தில்லையே?

"எப்படியிருக்கிறது?" மென்று விழுங்கிக்கொண்டு, வாசு கேட்டான்.

"மயக்கம் போட்டிருக்கிறது" கையிலும் தலையிலும் இருந்த காயங்களைத் துடைத்துவிட்டார்கள்.

"உள்ளே கொண்டுபோய் போடு! மயக்கம் தெளிந்ததும், எக்ஸ்ரே எடுக்கவேண்டும்." என்று டாக்டர் சொன்னார். படுக்கை வண்டி உருண்டு உள்ளே சென்றது.

வாசு தலையில் கைவைத்துக்கொண்டு, வெளியில் உட்கார்ந்தான். காரில் ஏதோ விபத்து என்று கேள்விப்பட்டு, வாசுவின் அப்பாவும் அம்மாவும் வந்துவிட்டார்கள்.

"எங்கே அடிப்பட்டது?" என்று மகனைப் பிடித்துப் பார்த்து, கனகம்மாள் கேட்டார்கள்.

"எனக்கொன்றுமில்லையம்மா! வேறொருவர் மீதுதான் அடிபட்டுவிட்டது!"

"சரியான வழியில்தானே சென்றாய்? அதிக வேகமில்லையே?" என்று விபத்தை விளக்கும் சட்ட நுணுக்கங்களை அவன் தந்தை கேட்டுக்கொண்டிருந்தார். வாசுதேவன் பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

ஒருமணிநேரங் கழித்து, டாக்டர் வெளியே வந்தார்.

"எப்படியிருக்கிறது?" பரபரப்புடன் மூன்று பேர்களும் எழுந்து நின்றார்கள்.

"கையில் எலும்பு முறிந்திருக்கிறது" டாக்டர் அமைதியாகக் கையைத் துடைத்துக்கொண்டு கூறினார்.

"வேறொன்றுமில்லையே?" உள்ளே போக ஆரம்பித்தனர்.

"இப்பொழுது பார்க்கவேண்டாம்! அமைதியாக இருக்கட்டும். காலையில் பார்த்துக்கொள்ளலாம்."

பழனியப்பன் மட்டும் டாக்டருடன் அவர் அறைக்குச் சென்றார். இருவரும் பேச ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் எதைப்பற்றியும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. வாசு அவன் அம்மாவுடன் திரும்பிவிட்டான்.

வாசுவுக்கு அன்று இரவு முழுவதும் சரியான உறக்கமில்லை. நடுநிசிக்குப்பின் இரண்டு தடவை எழுந்து, டாக்டர் பொன்னையா நர்சிங் ஹோமுக்குப் போன் செய்தான்.

"எப்படியிருக்கிறது?"

"யாருக்கு?"

"நான்தான் வாசுதேவன். இன்றுமாலை நடந்த கார் விபத்தில்......"

"அந்தக் கேஸா?"

"ஆமாம். எப்படியிருக்கிறது?" வாசுவின் மனம் படபடத்தது. உடனே ஏன் பதில் வரவில்லை. ஏதாவது ஆபத்து—கடைசியாகச் சாவு வந்துவிட்டதோ? வாசுவின் நெற்றியில் வியர்வை அரும்பியது.

"நன்றாகத்தான் இருக்கிறது. தூக்கம். காலையில் பார்க்கலாம்" பதில் வந்தது.

வாசுவுக்கு அந்தப் பதில் திருப்தியளிக்கவில்லை. நன்றாக இருந்தால், "காலையில் பார்க்கலாம்" என்று ஏன் சொல்லவேண்டும்?

இரண்டாவது தடவைக் கேட்டபொழுதும் அதேமாதிரி அமைதியான-அலுத்தக் குரலில் பதில் வந்தது. வாசுவுக்குப் பயம் அதிகமானதேயொழிய குறையவில்லை. இதுவரை அவன் எதற்கும் அதிகம் கவலைப்பட்டதில்லை. இந்தக் கார் விபத்து அவனது அமைதியைக் கலக்கிவிட்டது. விபத்துக்களைப்பற்றிப் படித்திருந்தாலும், கேட்டிருந்தாலும், நேரில் அதில் சம்பந்தப்படும்பொழுதுதான் அதன் பயங்கரம் தெரிகிறது.

காலை நான்கு மணியளவில் டெலிபோன் மணி அடித்தது. வாசுதேவன் துள்ளி எழுந்தான். அவன் பாதித்தூக்கம் பாதி விழிப்பில்தான் இருந்தான். மருத்துவ மனையிலிருந்துதான் கூப்பிடுவார்கள். என்ன நேர்ந்திருக்கும்? சாவா? வாசுவால் டெலிபோனை எடுக்க முடியவில்லை. ஆனால் மணி அடித்துக்கொண்டேயிருந்தது. கடைசியாகப் பல்லைக் கடித்துக்கொண்டு எடுத்தான். அப்பாடா! யாரோ தவறான நம்பரைக் கூப்பிட்டிருக்கிறார்கள்.

விடியும்வரை அவன் உலவிக்கொண்டிருந்தான். காலையில் எழுந்ததும் என்ன நடக்கப் போகிறது? போலீஸ் அவனைக் கைதுசெய்வார்களா? கீழே இறங்கிப்போய், தோட்டத்தில் இருந்த காரைப் பார்த்தான். இருட்டில் அதன் தோற்றமே பயங்கரமாயிருந்தது. இன்னும் அது எவ்வளவுபேரை உருட்டிச்சாகடிக்கப்போகிறதோ? இயந்திரங்களென்றாலே ஆபத்து அதிகம்தான். ஒன்றும் தெரியாத அந்த இயந்திரத்தைச் சொல்லிப் பயன் என்ன? ஓட்டும்பொழுது மெதுவாகப் பார்த்து ஓட்டியிருக்கவேண்டும்! பிரேக்குகள் சரியாக இருந்ததால் தப்பித்தான்.

காலையில் மிக அவசரமாக, முகத்தைத் துடைத்துக்கொண்டு, வாசு கிளம்பினான். நடந்து போனான், காரில் சென்றுதான் ஒரு விபத்து வந்துவிட்டதே!

வாசுதேவன் மருத்துவப் பணிமனையில் நுழையும்பொழுது அது சந்தடியற்றுக் கிடந்தது. யாரைக் கேட்கலாம்? அவன் கேட்பதற்கு முன், அவனை நோக்கி வந்தவர்கள் கடந்து சென்றுவிட்டார். என்ன கேட்கப் போகிறான் என்பதைத் தெரிந்துதான் அவர்கள் ஒதுங்கிச் செல்கிறார்களா? மெதுவாக அடிமேல் அடிவைத்துச் சென்றான்.

"நேற்று அடிப்பட்டவர்"

"அந்தக் கேஸ் எட்டாம் நெம்பர் பெட்டில் இருக்கிறது"

"எப்படி இருக்கிறது?"

"இருக்கிறது போய்ப் பார்க்கலாம்"

வாசுதேவன் பார்க்கச் சென்றான். ஒவ்வொரு அடியும் ஒரு யுகத்தைக் கடப்பது போலிருந்தது. உள்ளே போகத் தயங்கி, பின் உள்ளே வந்தான். "3"ம் நம்பர். "4" யாரோ தலைக்கட்டுடன் படுத்திருந்தார்கள். "6"ம் நம்பர் படுக்கை காலியாகக் கிடந்தது.

"8" எட்டாம் நம்பர் படுக்கை! உயிர் இருக்கிறதா? அல்லது...வாசு பதைப்புடன் பார்த்தான்.

கழுத்துவரைப் போர்வை மூடப்பட்டிருந்தது. இடது கை கட்டப்பட்டு மேல் வைக்கப்பட்டிருந்தது. முகம் மட்டும் தெரிந்தது. ஒரு பெண்! அதிலும் அழகான பெண்! உறக்கம் கலையவில்லை, தலையசைத்துப் படுத்தாள்! முகத்தில் புன்னகை மலர்ந்தது!

வாசுதேவன் அசையாது அதிசயத்தைக் காண்பவன் போலப் பார்த்துக்கொண்டு, நின்றான்! எதிர்பார்த்ததற்கு மாறாக, சாவின் சோகத்தைக் காண்போமோ என்று அவன் வந்தபொழுது அழகின் சிரிப்பு அவன் முன் காட்சியளித்தது!

பக்கத்தில் நின்ற பணிப்பெண் இறுமினாள். வாசு திரும்பினான். "டாக்டர் பொன்னையா எப்பொழுது வருவார்"

"அவர் வர மணி பத்தாகும்!"

"நான்போய், பத்துமணிக்குத் திரும்புகிறேன். ஏதாவது சொல்லவேண்டுமென்றால், வீட்டுக்குப் போன் மூலம் செய்தியனுப்பவும்"

வாசு ஓட்டமும் நடையுமாகத் திரும்பினான். தோட்டத்தில் பழனியப்பன் உட்கார்ந்திருந்தார்.

"அப்பா, அந்தப்பெண் நன்றாகயிருக்கிறதப்பா?"

"யாரடா! அந்தப் பெண்"

"நேற்றுக் காரில் அடிப்பட்ட பெண்?"

"அது நேற்றே தெரியுமே! கையில் எலும்பு சிறிது உடைந்திருப்பதைத் தவிர, வேறு பலமான காயமில்லை, பயப்படவேண்டாமென்று டாக்டர் சொன்னார். அது கிடக்கட்டும், என்னைக் கேட்காமல் ஏன் காரை எடுத்தாய்?"

"அவசரமாகப் போகவேண்டியிருந்தது. அதனால்தான்....." வாசு இழுத்தான். ஏதோ சொல்லப்போய் அவர் ஏதோ கேட்க ஆரம்பித்து விட்டாரே! மெதுவாக அந்த இடத்தை விட்டு வாசு நழுவி, உள்ளே சென்றான்.

மாலதி-அதுதான் அடிப்பட்ட பெண்ணின் பெயர். அவளுடைய சொந்த ஊர் திருநெல்வேலிப் பக்கம். அவள் சென்னை ஆசிரியர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். விடுமுறையில் ஊருக்குப் போவதற்குமுன் தன்னுடன் படித்த பெண்களைப் பார்த்துவிட்டு, திரும்பும்பொழுது விபத்து நேர்ந்தது. ஊருக்குப் போய்ச் சேர்வதற்குப் பதில், ஆஸ்பத்திரிக்கு வந்துவிட்டாள். இந்த அளவுதான் வாசுவுக்கு விபத்து நடந்த ஒருவாரம் கழித்துத் தெரிந்தது. மாலதிக்கு வேண்டியவையெல்லாம் வாசு வீட்டிலிருந்து அனுப்பப்பட்டன. பெரும்பாலும் வாசு மருத்துவ மனையில் தான் இருந்தான். மருத்துவக்கலை உலகிலே சிறந்த பணியாக அவனுக்குப் பட்டது. மருத்துவமனை - டாக்டர் பொன்னையாவின் மருத்துவமனை மிகப்பெரிய இடமாக-மிகமுக்கியமான இடமாக அவனுக்குப் பட்

டது. அதிலும் மாலதியைப்பற்றி, சிகிச்சை செய்யும் டாக்டரைவிட அதிக அக்கரையை வாசுதேவன் காட்டிவந்தான். டாக்டரைவிட அதிகமான அளவுக்கு எலும்பு-எலும்பு முறிவு-ஒட்டுதல்-சிகிச்சை-பயிற்சி இவைகளைப்பற்றி வாசுவுக்கு இப்பொழுது நன்கு தெரியும், மற்ற டாக்டர்களுடன் அவன் தைரியமாகப் பேசினான். புதிதாக வருபவர்கள் அவனும் ஒரு டாக்டர் என நினைத்துப் பேசாமல் போனார்கள். இல்லையென்றால், டாக்டரல்லாத ஒருவனுக்கு அவ்வளவு தெரிகிறதேயென்று ஆச்சரியப்பட்டிருப்பார்கள். புரியாத நோயைப்பற்றி அதனால் பீடிக்கப்பட்ட நோயாளியைப்பற்றி, டாக்டர் ஒருவர் எவ்வாறு நினைத்தபடி இருப்பாரோ, அதைப்போல வாசுவும் இருந்தான். டாக்டர் பொன்னையா வரும்பொழுது, வாசுவும் உடனிருந்து கவனிப்பான். கொடுக்கப்பட வேண்டிய மருந்து, இன்ஜெக்ஷன், உணவு, எக்ஸரே படத்திலுள்ள தன்மை எல்லாவற்றையும் வாசு மிகக்கச்சிதமாகச் சொல்லி வந்தான். டாக்டரேகூட ஆச்சரியப்பட்டார்.

"நான் கூட இனி வேண்டியதில்லை, ஆபத்தை உண்டாக்கிய நீயே அது ஆறுவதற்குச் சிகிச்சை செய்துவிடலாம்" என்று பொன்னையா சிரித்துக்கொண்டு சொன்னார்.

"கார் விபத்துக்குப்பின், பையன் டாக்டர் வீட்டிலேயே கிடக்கிறான். விபத்தில் ஏற்பட்ட பயம் அவனை விட்டு இன்னும் போகவில்லை."

வாசுதேவனிடம் முதலில் இருந்த பயம் சிறிது சிறிதாகத் தெளிய ஆரம்பித்தது. நாளுக்கு நாள் மாலதி குணமடைந்து வந்தாள். இடது கையை மடக்கிப் போடப்பட்டிருந்த கட்டு ஒன்றைத் தவிர, மற்ற விதத்தில் அவள் நடமாடினாள், பலவீனத்தின் காரணமாகக் களைப்படைந்ததால் மீண்டும் படுத்துக் கொள்வாள்.

ஒருநாள் காலை மாடியிலிருந்து கீழே இறங்கி வந்த வாசு, ஒரு கணம் திகைத்து நின்றான். மாலதி நின்று கொண்டிருந்தாள். மடிந்த இடதுகையைப் புடவைத் தலைப்பு மூடிக்கிடந்தது. அவனுடைய ஆச்சரியம் அவளிடம் புன்னகையை வருவித்தது. அவன் எதிர்பார்க்கவில்லை அவளுக்கு அது வேடிக்கையாக இருந்தது. மாலதி அங்கு நிற்பது வாசுவுக்கு ஒரு புதுமையாக இருந்தது. மாலதி நோயாளியாக, மருத்துவ மனையில் மருந்து நாற்றத்துக்கிடையில் இருந்தாள். இப்பொழுது அவள் முழுதும் மாறி, நின்று கொண்டிருந்தாள் ஒரு பெண்ணாக! அதிலும் புன்னகையும் நாணமும் கலந்திட அவள் நின்றாள்!

"இங்கு எப்படி வந்தீர்கள்?"

"உங்கள் அம்மாவுடன். அந்த இடம் ஒரே நெருக்கமாக இருக்கிறது."

இரண்டுபேரும் பேசாமல் இருந்தார்கள். அவள் கூந்தலில் ஒரு ரோஜாமலர் சொருகப்பட்டிருந்தது.

மாலதி ஆரம்பித்தாள். "நான் இன்னும் இரண்டு நாட்களில் ஊருக்குப் போகலாமென்றிருக்கிறேன்."

"ஊருக்கா? ஏன்?"

மாலதியால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. சொந்த ஊருக்குப் போவதற்கு "ஏன் போகவேண்டும்?" என்று கேட்டால் என்ன பதில் தரமுடியும்,

"மூன்று வாரங்களாகிவிட்டது." மாலதி ஆரம்பித்தாள்.

வாசு மீண்டும் மாடிக்குத் திரும்பிவிட்டான். மாலதி பேசுவதை அவன் கவனித்ததாகத் தெரியவில்லை. மாடிப்படிகள் மாளாத மலைச் சரிவுகள் போலிருந்தன. மேலே வந்ததும் சட்டையைக் கழற்றிவிட்டு உட்கார்ந்தான். அவன் உள்ளத்தில் உலகம் இருண்டு, வெறுமையாகிக் கொண்டிருந்தது.

கீழே நின்றுகொண்டிருந்த மாலதிக்கு ஒன்றும் புரியவில்லை. தான் ஏதாவது கோபப்படும்படியாகச் சொல்லிவிட்டோமாவென்று அஞ்சினாள். நடுப்பகல் உணவுக்கு அவள் அங்குதான் இருந்தாள். வாசுதேவன் வரவில்லை. யாரும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை.

மாலையில் மாலதி தோட்டத்தின் மூலையில் இருந்த பலகையில் உட்கார்ந்திருந்தாள். இருபது இருபத்தைந்து நாட்களாக அடைந்து கிடந்து அழுகுரலையும் முனகல் சத்தத்தையும் மருந்து நாற்றத்தையும் விட்டு, நிம்மதியாக காற்றும் மெதுவாக வீசும் அந்த இடத்தில் அவள் இருந்தாள்.

யாரோ பக்கத்தில் நின்றார்கள்! மாலதி திரும்பிப்பார்த்தாள். வாசுதேவன் நின்று கொண்டிருந்தான். பயத்துடன், குனிந்து, குழப்பத்துடன் அவன் நின்றான். "என்னை மன்னித்து விடுங்கள் எதிர்பாராமல் ஏற்பட்ட அந்த விபத்தில் உங்கள் கையில் எலும்பு ஒடிந்துவிட்டது"

மாலதி சிரித்துக் கொண்டு எழுந்து நின்றாள். "அது நடந்தது. இப்பொழுது கை கூடச் சரியாகிவிட்டது. அதைப்பற்றி இப்பொழுது என்ன?"

"இருந்தாலும் என்னுடைய அலட்சியத்தால், உங்களுக்கு இவ்வளவு சிரமம்!"

வாசு தடுமாற்றத்துடன் நின்றான், சிறிது தூரம் நடந்து சென்றான். பிறகு திரும்பினான்.

"நான் ஒன்று சொல்லவேண்டும்"

"என்ன?"

வாசுதேவன் பேசுவதற்கு வார்த்தைகளைத் தேடி மரக் கிளையைப் பார்த்தான். மலர்க் கொத்துகள் அசைந்தன! வானத்தைத்தான் பார்த்தான், நட்சத்திரங்கள் மின்னின! எதிரே பார்த்தான், அசையாத மலர் முகம் அதில் ஒளி விட்ட இருவிழிகளைக் கண்டான்!

புன்னகை தந்தான், மற்றொரு புன்னகை எதிரொலித்தது!

அவன் தலை நிமிர்ந்து நோக்கினான். அவள் தலை கவிழ்ந்தாள்!

"மாலதி! உண்மையில் நான் பாக்கியசாலி"

"நான் மட்டும்..."

"மாலதி! மாலதி!"

வாசுவின் அம்மா வெளியில் வந்தார்கள்.

"நேரமாயிற்று. நாளைக் காலை...!" மாலதி சென்றாள்.

கார்விபத்து காதல் பாதையில் கொண்டு போய்விட்டது. காதல்! காதல்! எதிர்பாராமல் கிடைத்த காதல்! ஆகா! எதிர்பாராததாக ஏற்படுகிற காதலைப் பற்றி ஏராளமாகப் படிக்கிறோம். ஆனால் வெகு சிலருக்குத்தான் அந்த அரிய சந்தர்ப்பம் கிட்டுகறது. கண்டதும காதல், கடற்கரையில் காதல், கார் விபத்தில் காதல்...பல கதைகளை வாசுதேவன் படித்திருக்கிறான். எதிர்பாராத கார்விபத்து, அதில் ஒரு அழகி சிக்கிக்கொள்கிறாள், ஒரு வாலிபன் அவளைக் காபபாற்றுகிறான். அவள் குணமடையும்வரை பணிபுரிகிறான், முடிவில் காதல் தானே! இதை முதலிலேயே தெரிந்து கொள்ள முடியாமற்போயிற்றே என வாசு எண்ணிக் கொண்டான். எப்படிப் போனாலும், கடைசியாகக் காதல், இவ்வளவு நாட்களும் கனவுகண்டு வந்த தூய காதல்! இதோ வந்து விட்டது.

இரவு பதினோரு மணிவரை வாசு-தோட்டத்தில் நிலைகொள்ளாமல் சுற்றிக்கொண்டிருந்தான். "இருவரும் காதலிக்கிறோம். இனி என்ன செய்யவேண்டும்" காதல் கதைகள் மீண்டும் நினைவுக்கு வந்தன. காதலுக்கு முதல் முட்டுக்கட்டைகள் யார்? பெற்றோர்கள். சரி, போய் அப்பாவிடமும் அம்மாவிடமும் சொல்லிவிடக் கிளம்பினான்.

அப்பாவின் அறைக்குள் போய் நிற்பதற்கு, வாசுவிற்கு ஒருமணிநேரத்துக்கு மேலாயிற்று. என்னென்ன கேட்பார், எப்படி உறுதியாகப் பதிலளிக்கவேண்டும் என்று கேள்வி பதில்களுடன் வாசு சென்றிருந்தான். ஏதாவது மறுத்தால், வீட்டை விட்டு வெளியேறிவிடுவது என்ற உறுதியுடன் சென்றான்.

சாய்வு நாற்காலியில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த பழனியப்பன், மகன் வந்து கதவோரத்தில் நின்று கொண்டிருப்பதைக் கவனித்தார், பத்திரிக்கையைத் தாழ்த்தி "என்னடா?" என்று கேட்டார்.

"ஒன்று சொல்லவேண்டும்!" என்றான் வாசு.

அவன் அப்பா கேட்கத் தயாரானார். ஒன்று சொல்லவேண்டும் என்று ஆரம்பித்த வாசு ஒன்றும் சொல்லாமல் நின்று கொண்டிருந்தான்.

"என்ன சொல்ல வந்தாய்?" என்று மீண்டும் பழனியப்பன் கேட்டார்.

"கார் விபத்து ஏற்பட்டதல்லவா..." என்று வாசு இழுத்தான்.

"சரி, சரி! ஏன் சுற்றி வளைத்துச் சொல்லுகிறாய்! அந்தப் பெண்ணைப்பற்றிப் பேச வந்தாய், அவ்வளவுதானே!"

அப்பா பெரிய வக்கீல் என்பது சும்மாத் தானா? "உம்..." என்று வாசு நின்றான்.

"உன் அம்மாதான் கொஞ்சம் பிடிவாதம் செய்வாள். அதைச் சரிசெய்துகொள்ளலாம்"

அப்பாவிடம் இவ்வளவு சுலபத்தில் சம்மதம் பெற்றுவிடலாம் என்று அவன் எதிர் பார்க்கவில்லை. திகைத்துப் போய் அப்படியே நின்றான்:

"ஏன் நிற்கிறாய்? போய் படு, காலையில் பார்த்துக்கொள்ளலாம்"

காதலுக்குத் தடையாக ஒரு அப்பா இல்லாதிருப்பது எதிர்பாராத ஒன்று தானே! வாசுதேவன் மாடிப்படிக்கட்டில் போய் உட்கார்ந்து யோசித்தான்!

மாடிக்குப்போய் போனை எடுத்து, டாக்டர் பொன்னையா மருத்துவமனையைக் கூப்பிட்டான்.

"எட்டாம் நம்பர் படுக்கையிலிருக்கும் மாலதியைக் கூப்பிடவும்"

"மணி பதினொன்று ஆகிறதே! இருங்கள்.. இருங்கள்!"

வேறொரு குரல் வந்தது. "யார் பேசுகிறது?"

"வாசுதேவன் பேசுகிறேன்"

"நான்தான் மாலதி"

"மாலதி! மாலதி"

"உம்"

"உன்னிடம் ஒன்று சொல்ல மறந்துவிட்டேன்"

"என்ன?"

"உன்னை நான் காதலிக்கிறேன் மாலதி!"

அவள் சிரித்தாள் "இனிமேல் மறந்துவிட மாட்டீர்களே!"

"மாலதி!"

"உம்!"

"தூங்கப்போ! நேரமாகிவிட்டது. அமைதியாகத் தூங்கு!"

"சரி?"

"நல்ல கனவுகள் வருவதாக"

"என் வாழ்நாளிலேயே மிக நல்ல கனவு இன்றுதான்!"

"போய் படுத்துக்கொள், காலையில் பார்க்கலாம்"

வாசு டெலிபோனை வைத்தான்.

காலையில் மிக நன்ருக உடையணிந்து, பூச்செண்டு ஒன்றை எடுத்துக்கொண்டு, அவளுக்குத் தொடுத்த பூச்செண்டு. வாசுதேவன் மருத்துவ மனைக்கு வந்தான். வாசலில் நிற்கிற காவல்காரனிலிருந்து, வெளியே வருவோர் போவோர்-அடையாளந் தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் எல்லோருக்கும் வாசு வணக்கஞ் செலுத்தினன், சிரித்துப் பேசினன். அவனுடைய குதூகலம் பலருக்குப் புரியவில்லை. சிலர் முகத்தைத் திருப்பிக்கொண்டு போய் விட்டார்கள். டாக்டர் பொன்னையா வந்து கொண்டிருந்தார். வாசு அவர் கையைப் பிடித்துக் குலுக்கி, "எவ்வளவு நல்லநாள்!" என்றெல்லாம் பேசிச் சிரித்தான். அவர் ஒரு வார்த்தைகூட பதில் சொல்லாமல், முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டு போய்விட்டார். இந்த டாக்டர்கள், மருத்துவ மனையில் வேலை பார்ப்பவர்கள் எல்லோருமே இப்படித்தான்! விபத்து நடந்த அன்று வாசு கலங்கிப் போய் பதைபதைப்புடன் வந்தான், அவர்கள் சிரித்துக்கொண்டிருந்தார்கள்! இப்பொழுது வாசு சிரித்துக்கொண்டு வருகிருன், அவர்கள் "உம்" மென்று இருக்கிருர்கள்!

வாசுவேதன் பூச்செண்டை மறைத்துக் கொண்டு நடந்தான். படுக்கையில் மாலதி இல்லை. வெளியில் சற்றுநேரம் காத்திருந்தான். "மாலதி எங்கே?" என்று கேட்டான், பணிப்பெண் ஒரு அறையைச் சுட்டிக்காட்டினுள். வாசுதேவன் உள்ளே சென்ருன்.

கட்டிலில் அவள் உறங்கிக்கொண்டிருந்தாள். போர்வை நன்ருகப் போர்த்தப்பட்டிருந்தது.

"நன்ருகத் தூங்கிக்கொண்டிருக்கிருள்." வாசு அருகில் சென்ருன்.

"நீண்ட தூக்கம்" எழுதிக்கொண்டிருந்த உதவி டாக்டர் சொன்னுர்.

வாசு படுக்கையருகில் சென்ருன்.

உதவிடாக்டர் மெதுவாகச் சொன்னுர். "இறந்துவிட்டாள்."

சம்மட்டியால் ஓங்கி மார்பிலே அடிக்கப்படுவதுபோலிருந்தது. புலன் கலங்கி வாசு திகைத்து நின்ருன். டாக்டர் என்ன சொன்ஞர் என்றே புரியவில்லை.

டாக்டர் முகத்தைப் போர்த்தியிருந்த துணியை எடுத்தார். தூக்கத்தில் ஆழ்ந்த முகம். வாசு கையை வைத்தான். சில்லிட்டது.

வாசுதேவன் நெற்றியின் கையை வைத்து நின்ருன், யாரால் நம்பமுடியும்? யார்தான் நம்புவார்கள்? மாலதி இறந்துவிட்டாள்! மாலதி இறந்துவிட்டாள்!

"நேற்று இரவு பதினேருமணிக்கு போனில் பேசினுளே!" வாசுவின் குரல் வரண்டது.

"காலை நான்கு மணிக்கு உயிர் பிரிந்திருக்கும். இருதயக் கோளாறு தூக்கத்தில் இறப்பு!"

கையிலிருந்த பூங்கொத்தை மாலதியின் பக்கம் வைத்தான். பின்னுல் டாக்டர் பொன்னையா நின்றுகொண்டிருந்தார். "மிகப் பலவீனமான இருதயம் கார் விபத்தின்போதுகூட, அவள் மயக்கம் போட்டு விழுந்ததால் தான் விபத்து நேர்ந்தது. காலையில் ஐந்து மணிக்கு எனக்கு போன் வந்தது. தூங்குகையில் அவள் இறந்திருக்கிருள். மிக துக்ககரமான சம்பவம்."

டாக்டர் பொன்னையா அவள் நெற்றியில் தவழ்ந்த மயிர்ச்சுருளை நீக்கிவிட்டார். "மிகுந்த மகிழ்ச்சிகரமான உள்ளத்துடன் அவள் தூங்கப்போயிருக்கிருள். அந்த மகிழ்ச்சி முகத்தில் அப்படியே பிரதிபலித்திருக்கிறது. நேற்று இரவு தங்கப் போகும்பொழுது யார்தான் எதிர்பார்த்திருப்பார்கள். எதிர்பாராத சாவு!"

"எதிர்பாராதது! எதிர்பாராதது! வாழ்வில் எதுவும் நிச்சயமாக இல்லையா?" வாசுதேவன் வெளியேறினுன்.

"வாழ்வில் வேறு எதுவும் நிச்சயமில்லை, ஆனுல் வாழ்க்கை ஒன்றுமட்டும் நிச்சயமானது" வாசுதேவனின் காதில் அவை விழவில்லை. டாக்டர் பொன்னையா மிக மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்தார்.

வினாவும் விளக்கமும்

வினா: திராவிட முன்னேற்றக்கழகம் திராவிட நாட்டு விடுதலைக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டதாக மாற்றுக் கட்சியினர் சிலர் பறைசாற்றி வருகிறார்களே அது பற்றிய கருத்து என்ன?

விளக்கம்: பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்து பொய்யிலே வாழ்கின்ற சில மாற்றுக் கட்சிக்காரர்களின் புலம்பல்களிலே ஒன்றுதான், வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கும் கருத்தாகும்.

கதிரவன் ஒளியை விட்டுவிட்டான்-நறிய சந்தனம் மணத்தை விட்டுவிட்டது-நல்ல முத்து குளிர்ச்சியை விட்டது-நறுந்தேன் இனிப்பை விட்டுவிட்டது-குயில் கூவுதலை விட்டுவிட்டது என்றால் அதில் எவ்வளவு உண்மை இருக்க முடியுமோ அவ்வளவு உண்மைதான், திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடநாட்டு விடுதலைக் கோரிக்கையை விட்டுவிட்டது என்று கூறப்படும் கூற்றிலும் அமைந்திருக்கிறது.

அரசியல், பொருளாதார, சமூகம், மொழி, நாகரிகம், பண்பாடு ஆகிய துறைகளில் திராவிடம் வளர்ச்சியுற்று ஓங்கு புகழ் எய்த வேண்டுமானால், திராவிடம் வடநாட்டுப் பிடிப்பினின்றும் விடுதலை பெற்றுத் தனிநாடாக உருப்பெற்றெழவேண்டும் என்ற கருத்தைத், திராவிட முன்னேற்றக் கழகம் முன்பெல்லாம் வலியுறுத்தி வந்ததைப் போலவேதான், தேர்தல் காலத்திலும் சரி, இப்பொழுதும் சரி வலியுறுத்தி வருகிறது. திராவிட நாட்டு விடுதலைக் கோரிக்கையைக் கழகம் என்றென்றும் உயிர்நாடிக் கொள்கையாகத்தான் போற்றி வளர்த்து வருகிறது.

திராவிட நாட்டு விடுதலைக் கோரிக்கையை பொறுத்தவரையில் கழகம் ஒளிவு மறைவாக வைத்துப் பேசுவதற்கு ஏது ஒன்றுமில்லை. கதிரவனுக்கு ஒளி உண்டு என்பதை மக்கள் எவ்வளவு தெளிவாக அறிந்திருக்கிறார்களோ அவ்வளவு தெளிவாக தி.மு. கழகம் திராவிட நாட்டு விடுதலையை வேண்டி நிற்கும் கழகமாகும் என்பதையும் அறிவார்கள். கழகம் அந்தக் கோரிக்கையை விட்டு விட்டதாக எண்ண வேண்டிய சூழ்நிலை ஒரு பொழுதும் ஏற்படவில்லை.

"கழகம், திராவிட நாட்டு விடுதலைக் கோரிக்கையை விட்டுவிட்டது. எனவே உங்களுடைய மேலான வாக்குகளை எங்களுக்கு அளியுங்கள்" என்று எந்தக் கழகத் தோழரும் எந்த ஒரு மேடையிலும் எவரிடமும் கூறியதில்லை. வாய்ப்புகள் ஏற்படும் போதும், வலியுறுத்திக் கூறவேண்டிய நிலை ஏற்படும் போதும் திராவிட நாட்டுப் பிரிவினை முழக்கம் எழுப்பப்பட்டே வந்திருக்கிறது. தி. மு. கழகத்தின் முக்கிய முழக்கம் இது என்பதை மக்கள், தேர்தல் காலத்தில் அடியோடோ அல்லது மேலெழுந்தவாரியாகவோ மறந்து விட்டார்கள் என்று கூற முடியாது. தி.மு.கழகம் என்ற ஒலி முழக்கம் எவர் செவியில் விழுந்தாலும், கழகத்தின் திராவிட நாட்டுப் பிரிவினை கோரிக்கைதான்! அப்படியே ஏதும் அறியாத பொதுமக்களிலே சிலர் தேர்தல் காலத்தில் அதனை அறியாமலிருந்தார்கள் அல்லது மறந்திருந்தார்கள் என்றே வைத்துக் கொண்டாலும், மாற்றுக் கட்சிக்காரர்கள், மக்களின் செவி செவிடுபடும்படியாகக், கூட்டந் தோறும் "கழகம் திராவிட நாட்டுப் பிரிவினையைக் கோருகிற ஒன்றாகும்" என்னும் கருத்துப் பட வசை மொழிகளால் உணர்த்தியே வந்திருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கைக்கும் ஒரு சிறிதும் தொடர்பே இல்லை என்று தேர்தல் காலத்தில், எண்ணியவர்கள் சித்தம் குழம்பியவர்களைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது. தி. மு. கழகம் திராவிட நாட்டு விடுதலையை விரும்பி நிற்கிற ஒரு கட்சியாகும் என்பதைக் கழகத்தவர்கள் மறுக்கவுமில்லை, மறைக்கவுமில்லை, மறக்கவுமில்லை, பொதுமக்களும் மறந்திருக்கமுடியாது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையை (Election Manifesto) ஊன்றிப்படிக்காத சில மாற்றுக் கட்சி அவசர முடிவுக்காரர்கள் தாம் "தி. மு. கழகம் திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்டது" என்று புலம்பித்திரிகிறார்கள். தேர்தல் அறிக்

கையின் முதல் பக்கத்தில் முதல் பாராவில் "திராவிடத்தின் விடுதலை வேண்டி நிற்கும் கழகம்" என்று தெளிவாகக் குறிப்பிட்டேயிருக்கின்றது. தேர்தல் அறிக்கையின் இரண்டாவது பாராவில் "அரசியல் அமைப்பில் செய்யப்படவேண்டிய முதல் மாற்றம், எந்த ஒரு மாநிலமும் எப்போது வேண்டுமானாலும் இந்திய யூனியனிலிருந்து பிரிந்து சென்று தனித்து இயங்கும் உரிமையைத் தானே பெற்றிருக்க வழி செய்வது தான்" என்றும் தெளிவாக வலியுறுத்திக் கூறப்படுகிறது.

தேர்தல் அறிக்கையின் இறுதியில் "சமுதாயத்தில் நிலவும் சாதிமுறைக் கேடுகளை ஒழித்துச் சாதிகளற்ற ஒரு சமுதாயத்தைக் காண்பதற்கும், திராவிட நாட்டின் அரசியல் சுதந்தரத்தை உருவாக்கவும், சமதர்மக் குடியரசைக் காணவும் தொடர்ந்து போராடக் கழகம் உறுதிபூண்டுள்ளது" என்றும் திட்டவட்டமாகத் தெளிவாகக் கழகத்தின் உயிர்நாடிக் கொள்கை வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

உண்மை இப்படியிருந்தும் "திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையைக் கழகம் தேர்தல் காலத்தில் கைவிட்டுவிட்டது" என்று உளறிக் கொட்டுபவர்களும் இருக்கிறார்கள் என்றால், அவர்களது அறியாமைக்குக் கழிவிரக்கங் காட்டுவதைத் தவிர வேறு என்ன செய்ய இயலும்? வேண்டுமானால் "திராவிடநாடு திராவிடருக்கே!" என்று அவர்கள் செவியில் ஆழப் புகும் வண்ணம் மீண்டும் ஒரு முறை முழங்கிக் காட்டுவோம்!

* * *

வினா: ஏன் திராவிட நாட்டுப் பிரிவினை ஒன்றை மட்டுமே தேர்தல் திட்டமாக வைத்துத் தி. மு. கழகம் தேர்தலில் போட்டி போட்டிருக்கக் கூடாது?

விளக்கம்: திராவிடத்திலுள்ள மக்கள் அனைவரும் திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையை அப்படியே ஏற்றுக் கொண்டு விட்டார்கள், அதனை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எவருமில்லை என்று கழகம் வீராப்புப் பேசியிருந்தால், மேற்கண்ட வினாவை எழுப்புவதில் பொருளிருக்க முடியும். அப்படிப்பட்ட வீராப்பைக் கழகம் எப்பொழுதும் கொண்டதில்லை.

திராவிட நாட்டுப் பிரிவினையை வேண்டி நிற்கும் கழகம் பொதுமக்கள் மன்றத்தில் கருத்துக்களைப் பரிமாறுகிறது, மெல்ல மெல்ல ஆதரவைப் பெற்று வருகிறது; பெற்றிருக்கும் ஆதரவுக்கும் பெறவேண்டிய ஆதரவுக்கும் இடையே உள்ள இடைவெளி மிகப் பெரிது என்பதையும் அது உணருகிறது; பெற்றிருக்கும் ஆதரவு போதாதது, மேற்கொண்டு ஆதரவைப்பெற பெரு முயற்சியும், பெரு உழைப்பும் செலவிட வேண்டியிருக்கிறது என்பதையும் அது நன்கு உணருகிறது; ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருகிறது என்பதையும் அது அறிகிறது; எனவேதான் திராவிடத்தை அனைத்து வழிகளிலும் முயன்று மீட்கும் அறிவுப் படைகளையும், ஆற்றல் படைகளையும் திராவிடத்தின் பல பகுதிகளிலேயும் உருவாக்கும் அரும் பணிகளில் கழகம் ஈடுபட்டுள்ளது. அப்படிப்பட்ட அரும் பணிகளிலே ஒன்றாகத்தான் இப்பொழுது தேர்தலில் ஈடுபடுவதைக் கழகம் கொண்டிருக்கிறதேயல்லாமல், தனது திட்டத்திற்கு முடிந்த முடிவு கூறும் ஒன்றாக இந்தத் தேர்தலைக் கருதவில்லை. கழகம் எடுக்கவேண்டிய முயற்சிகளையெல்லாம் எடுத்துப், பெறவேண்டிய ஆதரவையெல்லாம் பெற்றான பிறகு வேண்டுமானால் பின்னால் ஒருபொழுது தனது பிரிவினைத் திட்டத்திற்கு முடிவு கூறும் ஒன்றாகப் பொதுத் தேர்தலைக் கருதும். அப்படிப்பட்ட ஒரு காலம் வந்தே தீரும், வராமற் போகாது.

வினை வலியையும், தன் வலியையும், மாற்றான் வலியையும், துணை வலியையும் ஆராய்ந்து பார்க்கும் கழகம், இன்றைய சூழ்நிலையில் எந்த அளவுக்குச் சட்டமன்றம் - பாராளுமன்றம் ஆகியவற்றில் நுழைந்து பாடுபட முடியும் என்று கருதுகிறதோ அந்த அளவுக்குத்தான் தேர்தல் அறிக்கையின் திட்டங்கள் அமைந்திருக்கின்றன. கழகத்திற்கு ஆதரவும், வலிவும் பெருகப்பெருகத் தேர்தல் திட்டங்களும் நாளடைவில் தனித் திராவிடத்தின் தன்மைகளை வலியுறுத்துவனவாக அமையும். வருங்காலம் ஒன்றில் திராவிடத்தையே மீட்டுக் காப்பாற்றும் திட்டங்களாகத் தேர்தல் திட்டங்கள் அமைந்தாலும் அமையக்கூடும். இன்றுள்ள சூழ்நிலையில் திராவிட நாட்டுப் பிரிவினைக் கருத்துக்களைப் பரப்புவதற்கும், வற்புறுத்துவதற்கும் அமைந்துள்ள வாய்ப்புக்களிலே ஒன்றாகச் சட்டமன்றத்தைக் கழகம் கருதுகிறதேயல்லாமல், திராவிடத்திற்கு விடுதலையை வாங்கித்தரும் ஒன்றாகக் கருதவில்லை. எனவேதான் '**திராவிட நாட்டைப் பிரிப்பதை**'த் தேர்தல் திட்டமாகக் கொள்ளாமல், '**திராவிடநாட்டுப் பிரிவினையை வலியுறுத்துவதை**'த் தேர்தல் திட்டங்களிலே ஒன்றாகக் கொண்டிருக்கிறது.

கழகம் அளவறிந்து பணியாற்றி வருகிற கட்சியேயல்லாமல், அளவுக்கு மீறித் தன்னைத் தானே எடைபோட்டுக்கொண்டு வீராப்புப் பேசித் திரிகிற கட்சியல்ல!

(18-ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தை பிறந்தது. அதற்கு பெர்ஸி பிளாரன்ஸ் என்று பெயரிட்டார்கள். பிறந்த குழந்தையின் முகத்தைப் பார்த்து மறைந்த மகனைப்பற்றிய துக்கத்தை மறந்தாள். மேரியின் தனிமையைப் போக்க அவளுடைய உறவினரான டாம்மெட்வின் அவர்களுடன் தங்கினர். அவர் வில்லியம் என்பவரையும், அவரது இளம் மனைவியையும் ஷெல்லி குடும்பத்தினருக்கு அறிமுகப்படுத்தினர். இவர்களின் கூட்டுறவில் மனக்கவலையை மறந்து வாழ்ந்தனர். ஷெல்லி, பைரனை அவன் புதுக்காதலியுடன் விருந்திற்கு அழைத்தான். பைரனுக்கு ஷெல்லி தங்கியிருந்த இடம் மிகவும் பிடித்திருந்தது. ஷெல்லி, வில்லியம், பைரன் மூவரும் பொழுதை மிகவும் இன்பமாகக் கழித்தனர். ஆனால் மேரி, இங்கிலாந்திலிருந்து இத்தாலி வருபவர்களால் புறக்கணிக்கப்பட்டாள். அதனால் மிகவும் மனவேதனையடைந்தாள்.

வில்லியம், டிரலாவ்னி என்ற கடற்படை வீரனை ஷெல்லிக்கும் பைரனுக்கும் அறிமுகம் செய்துவைத்தான். டிரலாவ்னிக்கு ஷெல்லியிடம் மதிப்பு அதிகம். டிரலாவ்னியின் உதவியால் ஷெல்லியும் பைரனும் இரண்டு படகுகள் வாங்கினர். ஷெல்லி தன் படகுக்கு 'ஏரியல்' என்று பெயர் வைத்தான். காலையிலும் மாலையிலும் ஷெல்லியும் வில்லியமும் தங்கள் குடும்பங்களுடன் 'ஏரியல்' படகில் கடலில் நெடுந்தூரம் சென்று வருவது வழக்கம். மேரிக்கும் ஜேனுக்கும் கடலைக்கண்டால் களிப்புப் பெருகுவதில்லை. எனினும் அப்படகையோட்டி இன்பம் காணும் தங்கள் கணவன்மார்களுக்காக, அவர்களின் இன்பம் குன்றாமல் இருக்க அவர்களும் அடிக்கடி படகில் சென்றார்கள். ஜேனுக்கு இனிமையான குரல் உண்டு. படகில் அமர்ந்து இன்பப்பண்பாடி அவர்களை மகிழ்விப்பாள்.

ஷெல்லி பைரனுடன் கலந்து பேசி இங்கிலாந்தில் உள்ள தன் நண்பன் ஹண்ட் என்பவனை அவன் குடும்பத்துடன் கடன் தொல்லை தவிர்த்துப் புதுவாழ்வு பெற இத்தாலிக்கு வரும்படி அழைத்துப் பொருளுதவி செய்தான். 1822 ல் ஜூன் திங்களில் ஹண்ட் லெக்கார்ன் வந்து சேர்ந்தான். அவனைச் சந்தித்து பைரனுக்கு அறிமுகப் படுத்தி, பத்திரிக்கை ஒன்று ஆரம்பிப்பதற்கு ஆவன செய்துவிட்டு வர ஷெல்லி மேரியையும் ஜேனையும் விட்டுவிட்டு வில்லியத்துடன் லெக்கார்னுக்குத் தன் படகில் வந்தான். ஜூலைத்திங்கள் எட்டாம் நாள் டிரலாவ்னி, ஷெல்லி, வில்லியம் மூவரும் தங்கள் அலுவல்களை ஒத்துக்கொண்டு கடற்கரைக்கு வந்தார்கள். வானத்தில் மேகம் திரண்டு கொண்டிருந்தது. டிரலாவ்னியின் படகு சுங்க அதிகாரிகளால் நிறுத்தப்பட்டுவிட்டது. டிரலாவ்னி, மழையும் புயலும் வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்று கூறித்தடுத்தும் வில்லியமும் ஷெல்லியும் சார்லஸ் என்னும் படகோட்டியுடன் ''ஏரியலில்'' செல்லக் கிளம்பினர்கள். டிரலாவ்னி கடற்கரையினின்று 'ஏரியல்' தொலைதூரம் சென்று மறையும் வரை பார்த்து விட்டுத் தன் அறைக்குச் சென்றான். தங்களை விட்டுப் பிரிந்து சென்ற கணவர்களைத் தேடி வீட்டின் மேல் மாடியில் இரவும் பகலும் உட்கார்ந்து கைக்குழந்தைகளுடன் கடலையே வெறித்துப் பார்த்த வண்ணம் வீற்றிருந்தனர் மேரியும் ஜேனும்! கடலில் சிறிது தூரம் சென்றதும் புயலும் மழையும் பெருகி 'ஏரியல்' கவிழ்ந்து மூவரும் மாண்டார்கள். ஒருவாரம் கழிந்தது. மேரியும் ஜேனும், சென்றவர்கள் திரும்பாத காரணத்தால் மனம் குழம்பி லெக்கார்ன் சென்றனர். செல்லும்வழியில் நடு இரவில் பைரனைச் சந்தித்தனர். ஒரு வாரத்திற்கு முன்பே சென்றார்கள் என்பதைத் தவிர வேறு செய்தி கிடைக்காமல் நட்ட நடுநிசியில் பைரனின் வேண்டுகோளைப் புறக்கணித்து லெக்கார்ன் வந்து டிரலாவ்னியைச் சந்தித்து சேதி கேட்டுத் திடுக்கிட்டனர்! தேம்பி அழுதார்கள்! இருந்தாலும் ஒரு நம்பிக்கை 'படகு வேறு தீவுகளுக்கு அடித்துச் செல்லப் பட்டிருக்குமோ' என்று! படகு பற்றிய குறிப்புக் கொடுப்பவர்களுக்குத் தக்க வெகுமதி கிடைக்கும் என்று விளம்பரப்படுத்தினர்கள்! ஆறு நாட்களுக்குப் பிறகு கடலோரத்தில், கரையில் ஒதுக்கப்பட்டுக்கிடந்தஉடலைக்கண்டனர்.கடற்பூச்சி புழுக்கள் தின்றது போக எஞ்சிய எலும்புடன் கூடிய கூடு மூன்று தனித்தனியே கரையோரத்தில் ஒதுக்கப்பட்டிருந்தன! வயது இருபதைத் தாண்டாத இளம் பருவத்தில் மக்கிப்போன மடமைக் கருத்துக்களை மாய்த்துப் பொங்கி வரும் புதுமைக் கருத்துக்களைப் பேசியதற்காக 'நாத்திகன்' என்ற பட்டம் சூட்டி பள்ளியிலிருந்து விரட்டப்பட்டு 'நாத்திகன்' அதனால் தந்தை தனயனைக் காணக்கூடாது என்று தீர்ப்பளித்து, வாழ்க்கை வசதிகளிருந்தும் வாழவொட்டாமல் தடுத்து, பிறந்த பொன்னாடு புண் நாடாகிய காரணத்தால் அமைதி தேடி வேற்று நாட்டின் ஆழ்கடலின் கரையில் குடியேறிய ஷெல்லி, என்றென்றும் அமைதியின்றி அல்லல்படும் அலைகடலின் நடுவே இழுத்துச் செல்லப்பட்டான்.

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆளவந்தார்கள் சரியான காரணம் தரவில்லை.

இப்பொழுதுள்ள சட்டசபைக் கட்டிடம், சட்ட சபை உறுப்பினர்கள் தங்கும் விடுதிக்கு அருகாமையிலுள்ளது. எனவே, சட்ட சபைக்கு வருவதற்கு அவர்களுக்கு சௌகரியமாயிருந்தது.

கோட்டைக்குள் அரசாங்கமுக்கிய அலுவலங்கள் இருக்கின்ற காரணத்தால் அங்கு சட்ட சபை கூடும்பொழுது அவைகளுக்கும், அவைகளால் சட்டசபை வேலைகளுக்கும் இடைஞ்சல்கள் இருந்தன. கோட்டைக்குள் இருந்த இடத்தை விட்டு, வெளியில் அமைக்கப்பட்ட கட்டிடத்தில் அந்த இடர் தவிர்க்கப்பட்டது. ஆனால் மீண்டும் கோட்டைக்குள் போவதால், பழைய நெருக்கடி மறுபடியும் தோன்றி ஒருவருக்கொருவர் தடையாக இருப்பார்கள்.

புதிய கட்டிடத்து அருகில்தான் சட்டசபை இலாகா வேலை செய்யும் இடம் இருக்கிறது. கோட்டைக்குள் சட்டசபை கூடுவதால், சட்டசபை இலாகாவுடன் தொடர்புகொள்வது முன்பு இருந்ததைப்போல சுலபமாக, விரைவாக இருக்காது.

இவற்றையெல்லாம் விட, புதிய கட்டிடத்தில பத்திரிக்கை நிருபர்களுக்கும் சட்டசபை நடவடிக்கைகளைப் பார்க்க வருகிற பொதுமக்களுக்கும் நிறைய இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. கோட்டைக்குள்ளிருக்கும் இடத்தில் அத்தகையவர்களுக்கு சரியாக இடம் கிடையாது.

சட்டசபை கூடுமிடத்தை புதிய கட்டிடத்திலிருந்து கோட்டைக்குள் கொண்டுபோவதற்கு அதுதான் முக்கிய காரணமாகக் காமராசருக்கு இருந்திருக்குமென்று நினைக்கவேண்டியிருக்கிறது. சட்டசபை நடவடிக்கைகளைப் பார்க்கப் பொது மக்கள் வருவதை அவர்கள் விரும்பவில்லை.

அதிலும் அறிஞர் அண்ணாவின் தலைமையில் திராவிட முன்னேற்றக்கழகத்தினர் சட்டசபைக்குள் நுழைந்துவிட்டனர், அவர்கள் பேசப்போகின்றனரென்றால் பொது மக்கள் கூடுவார்களல்லவா! அந்தப் பொதுமக்கள் வருவதைத் தடுக்க, சட்டசபை கூடுமிடத்தை மாற்றிக்கொண்டு அவர்கள் கோட்டைக்குள் பதுங்குகிறார்கள்.

சட்டசபை கூடுமிடத்தை மாற்றும்பொழுது சட்டசபையைக் கலந்துகொண்டுதான் செய்வோம் என்று கனம் சுப்பிரமணியம் சென்ற டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற சட்டசபைக் கட்டிடத்தில் உறுதி தந்தார்! ஆனால் இப்பொழுது சட்டசபையைக் கலக்காமல், புதிய சட்டசபை கூடுவதற்கு முன் அவசர அவசரமாக இடத்தை மாற்றுவானேன்? முன்பு அவர்கள் தந்த உறுதிமொழி என்னவாயிற்று? அதிகப்படியான பொதுமக்களின் பார்வையைக் கண்டு அவர்கள் ஏன் அஞ்ச வேண்டும்?

சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கைக் குறைந்துவிட்ட காரணத்தினால் இடத்தை மாற்றுகிறோமென்று சொல்வதுகூட சரியானதல்ல. சென்னை சட்டசபை உறுப்பினர்கள் எண்ணிக்கை பொறுத்தமட்டில் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது குறைவானது. சென்னை மாநிலத்தின் 3 கோடி மக்களுக்கு 205 சட்டசபை உறுப்பினர்கள்; ஆனால் பக்கத்தில் 3 கோடி 20 லட்சம் மக்கள் தொகை கொண்ட ஆந்திராவில் 301 சட்டசபை உறுப்பினர்கள் உள்ளனர். ஆகவே மக்கள் தொகையை வைத்துப் பார்த்தால், சென்னைக்கு 300 உறுப்பினர்கள் கிடைக்கவேண்டும். இதை முன்னாள் சட்டசபைச் செயலாளராக இருந்த திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர் அவர்கள் அண்மையில் ஒரு கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார். நாம் வற்புறுத்திக் கேட்டால், அந்த எண்ணிக்கை தரப்படலாம். அவ்வாறு 300 உறுப்பினர்களைக்கொண்ட சட்டசபை அமைக்கப்பட்டால், கோட்டைக்குள் இடம் போதாது. மீண்டும் புதிய கட்டிடத்துக்கு வரவேண்டியிருக்கும்,

வசதிகளுடன், சட்டசபைக்கென்று 10 லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஒரு இடத்தை விட்டு, நெருக்கடியான ஒரு இடத்தில் 6 லட்ச ரூபாயைச் செலவுசெய்து அவதிப்படுவதை விட, தற்பொழுதுள்ள வசதியான இடத்திலேயே இருந்துவிடலாம். அதனால் சட்டசபை உறுப்பினர்கள், பத்திரிக்கைக்காரர்கள், பொது மக்கள் ஆகிய எல்லோருக்கும் நலம் பயப்பதாகும். சென்னை அரசாங்கம் தனது அவசியமான—அவசியமற்ற இடமாற்றத்தை மாற்றிக் கொள்ளுமாக!

★

வெளிவந்துவிட்டது!

ஆசிரியர்:

இரா. செழியன், எம். ஏ.,

மூன்று சிறு நாடகங்களின் தொகுப்பு

"போராட்டம்"

விலை ரூ. 2-4-0

அச்சில்

இரா. நெடுஞ்செழியன், M. A.

எழுதிய

நற்றிணை தரும்

"காதற்காட்சிகள்"

★

"அறிஞர் அண்ணா"

கிடைக்குமிடம்;

பாரி நிலையம்

59, பிராட்வே :: சென்னை - 1.

பதிவு எண்: M 6296   மன்றம்   தொலைபேசி எண்: 55697

நாட்டவருக்கு ஓர் நற்செய்தி!

★

5–5–57 ஞாயிற்றுக்கிழமை முதல்

தனது ஆறும் ஆண்டுத் துவக்கத்தில்

மன்றம்

வார ஏடாக வெளிவருகிறது!

பல புதிய பகுதிகளைக் கொண்டு கழகக் கருத்துக்களைத் தாங்கி அரசியற், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளை விளக்கிடும் கட்டுரைகளோடு இதழ் மிளிரும்.

இதழின் அளவு டபுள் கிரௌன் – 1 X 4

(பக்கங்கள் 12)

தனி இதழ் விலை 16 காசு.

உங்கள் ஆதரவைத் தாரீர்!

“மன்றம்” அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி சென்னை-1)
ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.